தை - 2022

நன்கொடை ₹30

# கண்ணாமூச்சி

மண் சார்ந்த இலக்கிய இதழ் | தனிச்சுற்று | ஆடல் 1 | பாடல் 1



# சன்மேன்

டெய்லர்ஸ்

எண்:9. அரிசிக் கடைத் தெரு. மன்னார்குடி.

உரிமை: கோ.அருணகிரி

செல்: 9976052585

பறவைகள்
உயரத்தில் மிதப்பது
சாதனை அல்ல
அதுவே
அதன் இயல்பு
கண்ணாமூச்சிக்கு வாழ்த்துகள்...














# அகல்விளக்கு ஏற்றுகிறோம்

மன்னார்குடியில் நண்பர்களால் நடத்தப்படுகிற ஓர் இதழுக்கு நான் கவிதை அனுப்புகிறேன். அது அந்த இதழுக்கு ஏற்றதாய் இல்லையென மறுக்கப்படுகிறது. பரிதி அண்ணனுடனான சந்திப்பில், அவருக்கு அதை கூறுகிறேன்... ஒரு வேப்பமர நிழல் விரிப்பில் சிகரெட்டைப் புகைத்தபடி அவர் காதுகொடுத்துக் கேட்ட விதம் கவிதை அவருக்கு மிகவும் பிடித்து விட்டது என்பதை உணரமுடிந்தது. பிறகு நானும் மறந்து போனேன்... அவரும் காற்றில் கலந்து போனார்!

ஒரு சில நாட்களுக்கு முன்பு பாலா பரிதியண்ணனின் மகன் "உங்களுக்கு ஒரு வாட்ஸ்அப் அனுப்பி இருக்கிறேன்... பாருங்கண்ணே..." என்றார். பார்க்கிறேன். நான் அண்ணனுக்குச் சொன்ன அதே கவிதை. விவரம் கேட்டபோது, "அப்பாவின் பழைய குறிப்பேடுகளைப் புரட்டிக் கொண்டிருந்த போது ஒரு கவிதை இருந்தது. அதைப் படிக்கும் போது கீழே உங்கள் பெயர், கோ. அருணகிரி என்று அப்பா எழுதி இருக்கிறார்" என்றார் பாலா...

நான் நெகிழ்வதா..! மகிழ்வதா..! இந்த அமானுசத்தை நினைத்து ஆச்சரியப்படுவதா?

இதில் கவிதை என்பது விசயமல்ல.. எங்களின் இதழ் நடத்துகிற முயற்சி இழுத்துக் கொண்டே வருகையில் அண்ணனின் நினைவுநாள் சமீபிக்கும் சூழலில் இந்த நிகழ்வு எங்களை ஒருங்கிணைத்து எங்கள் முயற்சியை விரைவுப்படுத்தியது.

மன்னார்குடியில் இதற்கும் முன்பும் பல இதழ்கள் நடத்தப்பட்டன. அந்த இதழ்கள் பல்வேறு காரணங்களுக்காக நின்றும் போயின. எங்கள் இலக்கிய முன்னோடி பரிதிபாண்டியன் கண்ணாமூச்சி முதல் இதழில் எழுதி யதை அப்படியே இங்கு தருகிறோம்.

"பெருநிறுவனங்களால் நடத்தப்படும் வார, மாத இதழ்கள் முன்பு கடலில் பெருங்காயம் கரைத்தல் போன்ற இப்படியான முயற்சி, தாக்குப் பிடிக்க முடியாமல் நின்று விடுகிறது என்பது காலங்காலமாய் நடப்பதுதான். இதழ் நடத்துவது என்ற விட்டுவிட முடியாத பைத்தியக்காரத்தனத்தை அவ்வளவு இலேசாக ஒதுக்கிவிட முடியாது. இந்த இதழும் கூட அப்படி நின்றுவிடும். ஆனாலும் வேறு வேறு நண்பர்களால் தொடரத் தான் செய்யும். இப்படியான சிறு இதழ்கள் தான் சிறந்த சிந்தனையாளர்களையும் கதை சொல்லிகளையும் கவிஞர்களையும் தந்திருக்கின்றன என்பதை மறுக்க முடியுமா?" என்கிறார்.

வேறு இதழ்கள் வேறு நண்பர்களால் என்ற அண்ணன் பரிதி பாண்டியனின் வார்த்தை, அதே இதழ், அதே நண்பர்களால் என மாற்றி அமைக்கப்படுகிறது. இது ஆற்றுப் பெருக்காய் ஓடி வராவிட்டாலும் ஊற்றுப் பெருக்காய் உயிர்கசியும் என்று உறுதியளிக்கிறோம்.

அண்ணனின் ஆன்மாவின் அடிவாரத்தில் ஓர் அகல் விளக்கேற்றி இந்தப் பயணம் தொடங்குகிறது. அந்த எளிய வெளிச்சம் இந்த எளிய பயணத்தை வழி நடத்தட்டும்!

பாமணியாற்றுப் படுகையிலிருந்து...

அன்பின் ஈரங்களுடன்,

**கோ. அருணகிரி**

ஆசிரியர்.

**கண்ணாமூச்சி**

மண்சார்ந்த இலக்கிய இதழ்

தனிச்சுற்று

திருவள்ளுவர் ஆண்டு 2053

தை - 2022

நிறுவனர்
**ப. பரிதிபாண்டியன்**

ஆலோசகர்
**அம்ரா பாண்டியன்**

ஆசிரியர்
**கோ.அருணகிரி**

ஆசிரியர் குழு
**கலை பாரதி**
**த.ரெ. தமிழ்மணி**
**சா. தமிழ்ச்செல்வன்**
**ஞா.ஜெயக்குமார்**
**சா.சிவகுமார்**
**பாலகுமரன் பரிதி**
**ப.மணிவண்ணன்**

இதழ் வடிவமைப்பு
**விடா பப்ளிகேஷன்ஸ்**

தொடர்பு முகவரி
**சன்மேன் டெய்லர்ஸ்**
9 அரிசி கடைத் தெரு, மன்னார்குடி
திருவாரூர் மாவட்டம்.
கைபேசி: 9976052585 9655480092

அட்டைப்படம்
**வினையன்**

இடம்:
**கங்கைகொண்ட சோழபுரம்**

கண்ணாமூச்சியில் வெளிவரும் படைப்புகளுக்குப் படைப்பாளர்களே பொறுப்பாவர்.

# உள்ளே...

**பண்ணை பாயுதல்** — 5
சு.இராமசுப்பிரமணியன்

**நோடி நோன்பு** — 12
ஆ.அரிமாப்பாமகன்

**பரிதி எனும் மானுடன்** — 20
அம்ரா பாண்டியன்

**குமரேசன் சொன்ன கதை** — 26
த.ரெ.தமிழ்மணி

**இது இளவேனிலின் காதல்** — 31
கலைபாரதி

**போருக்கெல்லாம் பெரிய போரு வைக்கோலுப் போரு** — 44
இரா.மோகன்ராஜன்

கட்டுரை

# பண்ணை பாயுதல்

## சு. இராமசுப்பிரமணியன்

மார்கழி முடிவில் கடுங்குளிர் குறைந்திருக்கும். தை மாதம் இதமான குளிர் இருக்கும். நீரெல்லாம் குளிர்ந்திருக்கும் மழைக்காலம் முடிந்து நீர் நிலைகளில் நீர் நிரம்பியிருக்கும். ஆறுகளில் நீரோடும். அப்போது நீராடுவது அத்தனை சுகமளிக்கும்.

சங்க இலக்கியங்களில் சொல்லப்படும் 'தண் கயம்' என்பது, குளிர்ச்சியான நீரைக் கொண்டிருக்கும் ஆழமான பகுதியைக் குறிப்பதாகும். இப்போதும் எங்கள் ஊரில், ஆற்றின் ஆழமான இடத்தைக் 'கசம்' என்பார்கள். அது, 'கயம்' என்பதன் திரிபாக இருக்கலாம்.

*'தைஇத் திங்கள் தண்கயம் படியும்' (நற்.80)*

*'தைஇத் திங்கள் தண்கயம் போல்' (புறம் 70)*

*'நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்'*

*தைஇத் தண்கயம் போலப் பலர் படிந்து' (ஐங்குறு நூறு, 84)*

*"இழையணி ஆயமொடு தகு நாண்தடை இத்*

*தைஇத் திங்கள் தண்கயம் படியும்*

*பெருந்தோட் குறுமகள்" (கலி.59)*

மார்கழி முழுவதும் காலையில் நீராடி நோன்பிருக்கும் இளம் மங்கையர், தை முதல்நாள் குளிர்ந்த நீரில் நீராடி நோன்பை முடித்துக்கொண்டதாகவும் செய்தி சொல்லப்படுகிறது .

நான் பிறந்து வளர்ந்த ஊர் நெல்லை மாவட்டம் பாபனாசம் அருகில் 'இனாம்' சிவந்திபுரம். சிவந்தியப்ப நாயக்கன் என்பவன், திருவாவடுதுறை மடத்திற்கு இனாமாகக் கொடுத்த எட்டு ஊர்களில் முதன்மையானது சிவந்திபுரம் என்றும், அதனால்தான், 'இனாம் சிவந்திபுரம்' என்று பெயர் வந்ததாகவும், தமிழ்த்தாத்தா உவே.சா. தனது 'என் சரித்திரம்' நூலில் குறிப்பிட்டிருக்கிறார். உ.வே.சா. சிவந்திபுரம் வந்து, அங்குள்ள திருவாவடுதுறை மடத்தில் 42 தினங்கள் தங்கியிருந்து, கவிபாடி யிருக்கிறார் (பக்.449, என் சரித்திரம்). தாமிரபரணியின் கருணையால் செழிப்புற்ற ஊர், தாமிரபரணியின் தலையணையிலிருந்து பிரியும் 'வடக்குக் கோடைமேல் அழகியன் கால்வாய்' ஊரை ஒட்டியே பாயும் ஊர். ஊருக்குத் தெற்கில், கால்வாயைக் கடந்தால் பசுமையான வயல்களும், பொத்தைகளும் (குன்றுகள்), பனங்காடுகளும் பரந்திருக்கும். இப்போது, சில பொத்தைகளைக் காணோம். கிரானைட் என்று சொல்லி வெட்டி எடுத்துத் தூத்துக்குடி துறைமுகம் வழியாக ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி ஆகிவிட்டன. வயலின் வரப்பிலும் கூட பனைமரங்கள் இருந்தன. அவற்றையும்



வெட்டி வீழ்த்தி விட்டார்கள்.

அவற்றைக் கடந்தால் தாமிரபரணி ஓடுகிறது. தாமிரபரணிக்குத் தெற்கில் மீண்டும் வயல்வெளிகள், அவற்றிற்கு நீர் பாய்ச்சும் தெற்குக் கோடை மேல் அழகியன் கால்வாய். அத்தத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் பகுதியான பொதிகைமலை, பாபனாசம், காரையாறு, சேர்வலாறு, மணிமுத்தாறு, பகுதிகளில் அருவிகள் ஊரைச் சுற்றியும் குறிஞ்சி, முல்லை, மருதம், ஆகிய நிலங்களை உள்ளடக்கிய ஊர்.

இப்படியாக ஊரைச் சுற்றி எங்கும் ஓடும் ஆறும், கால்வாயும், பாயும் நீரோடைகளும், ததும்பி நிற்கும் நீர்நிலைகளும். அதனால், நீச்சல் என்பது எங்களுக்கு இயல்பிலேயே வந்துவிடும். பெரும்பாலும் யாரும் சொல்லித் தருவதில்லை,

அப்போதெல்லாம், பாத்திரம் கழுவுதல், துணிதுவைத்தல், குளித்தல் என்று அனைத்தும் வாய்க்காலில்தான். அம்மா பாத்திரம் கழுவும் போது, கையை காலை அடித்து நானாகவே கற்றுக் கொண்டதுதான் நீச்சல். ஓடை, வாய்க்கால், ஆறு, அருவி என்று அனைத்திலும் குளித்திருக்கிறோம். குளித்தோம் என்று சொல்வதை விடவும் குதித்து விளையாடினோம் என்று சொல்வதுதான் சரியாக இருக்கும்.

கோடை விடுமுறையில், பல மணி நேரம் நீரில் விளையாடுவதால், கண்கள் இரண்டும் கோவைப்பழம் போல சிவந்துவிடும். வீட்டிற்குத் தெரியாமல்தான் குளிக்கச் செல்வோம். அதனால், கண் சிவப்பை மாற்றுவதற்கு ஒரு வழி கண்டு பிடித்தோம். வெயிலில் சூடாக இருக்கும் கூழாங்கல்லை எடுத்து, கண்களை மூடிக்கொண்டு இமைகளில் ஒத்தடம் கொடுத்தால் கண்சிவப்பு மாறிவிடும். தண்ணீரில், நீண்டநேரம் குளிப்பதால், கண்கள் சிவக்கும் என்பது சங்கப் பாடல்களிலேயே இருக்கிறது.

*'நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும்"*

*(குறு.354)*

*''புலக்குவம் அல்லேம் பொய்யாது உரைமோ*

*நலந்தரு மகளிருக்குத் தோள் துணையாகி*

*தலைப்பெயல் செம்புன லாடி*

*தவ நனி சிவந்தன மகிழ்நனின் கண்ணே"*



*(ஐங்குறுநூறு 80)*

தலைவனின் கண்கள் சிவந்திருப்பதைக் கண்டு அதற்கான காரணமாகத் தலைவன் இளம்பெண்களுக்குத் தோள் கொடுத்து நீண்ட நேரம் நீராடியதே காரணம் என்று தலைவி கண்டுபிடித்துத் தலைவனுடன் ஊடுகிறாள். சங்ககாலத்தில் குறிஞ்சிநிலப் பெண்கள், அருவியில் நீராடுவதால் கண்கள் சிவந்திருக்கின்றன.

*"பொரு இல் ஆயமொடு அருவி ஆடி*

*நீர் அலைச் சிவந்த பேர் அமர் மழைக் கண்*

*குறியா நோக்கமொடு முறுவல் நல்கி*

*மனைவயின் பெயர்ந்த காலை,"*

*பல் மர உயர் சினை மின்மினி விளக்கத்து,*

*செல் மழை இயக்கம் காணும்*

*நல் மலை நாடன் காதல் மகளே?"*

*(நற் 44)*

தோழியரோடு, அருவியில் நீண்ட நேரம் நீராடியதில் தலைவியின் கண்கள் சிவந்து விட்டன (கோபத்திலும் கண் சிவப்பதுண்டு) கண்கள் சிவந்திருந்தாலும், தலைவனை நோக்கிய அவளது பார்வை குளிர்ந்திருந்தது. மலைநாட்டில், குறவர்கள் மின்மினி பறத்தலின் குறியைக் கொண்டே, மழை வருதலை அறிவர். போலவே, தலைவன் தலைவியின் பார்வையை வைத்தே அவளது எண்ணத்தை உய்த்துணர வேண்டும் என்று தோழிகள் உரைப்பதாக அமைந்த பாடல்.

சங்ககாலத்து இளம்பெண்கள், தோழியர் சூழச் சென்று புதுப் புனலில் நீந்தி, விளையாடிக் களித்திருக்கின்றனர்.

*"விளையாடு ஆயமொடு ஓரை ஆடாது*

*இளையோர் இல்லிடத்து இற்செறிந் திருத்தல்*

*அறனும் அன்றே; ஆக்கமும் தேய்ம்' என*

*குறு நுரை சுமந்து, நறு மலர் உந்தி*

*பொங்கி வரு புது நீர் நெஞ்சு உண ஆடுகம்*

*வல்லிதின் வணங்கிச் சொல்லுநர் பெறினே;*

*'செல்க என' விடுநள்மண் கொல்லோ?"*

*(நற் 68)*

ஆற்றில் புது நீர் பொங்கி வருகிறது. தோழியரோடு சென்று ஓரை ஆடாமல் வீட்டிற்குள் அடைந்து கிடைத்தல் அறனும் அன்று. ஆக்கமும் தேய்ந்துவிடும் என்று அன்னையிடம் தோழியர் வந்து கூறுவார்கள். அது கேட்ட அன்னை, 'பொங்கும் பூம்புனலில், நெஞ்சம் குளிர நீராடச் செல்க' என்று தன்னை அனுப்புவார் என்பதாக வீட்டில் அடைந்து கிடக்கும் தலைவி, தோழியிடம் வெளியில் செல்வதற்கான வாய்ப்பாகக் கருதி உரைக்கிறாள்.

வாய்க்கால் கரையிலும், ஆற்றங்கரைகளிலும் வளர்ந்து இருக்கும் மரங்களின் கிளைகளிலிருந்து தலைகீழாக நீரில் பாய்ந்து விளையாடுவோம்.

எங்கள் வயது பெண் பிள்ளைகளுக்கும் நீச்சல் தெரியும். அவர்களும் நீந்தி விளையாடுவார்கள். ஆனால், சமூகக் கட்டுப்பாடு காரணமாக, மரத்திலிருந்து தண்ணீருக்குள் பாய்வது ஆண் பிள்ளைகள் மட்டுமே.

இப்படித் தண்ணீருக்குள் தலைகீழாகப் பாய்வதைத்தான், 'பண்ணை பாயுதல்' என்கிறது சங்க இலக்கியப் பாடல்கள். நாங்கள் இப்படித் தலைகீழாகப் பாய்வதை, 'விரால் (மீன்) பாய்ச்சல்' என்போம். சங்க காலத்தில், மகளிரும் இப்படி ஆறுகளில் புதுப்புனல் வரும்போது பண்ணை பாய்ந்திருக்கின்றனர். அதற்காகக் கரையோரம் வளர்ந்திருக்கும் மருதமரத்தில் ஏறி ஆற்றின் நீருக்கு மேலாகச் செல்லும் தாழ்ந்த கிளை யிலிருந்து தண்ணீருக்குள் தலைகீழாகப் பாய்ந்து விளையாடியிருக்கின்றனர். நீராடும் துறைகளில் எல்லாம் மருத மரங்கள் ஓங்கி வளர்ந்திருக்கின்றன.

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான ஐங்குறுநூறு அக இலக்கியமாகும். ஐநூறு பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு



திணைக்கும் நூறு பாடல்கள். ஒரு திணைக்கான நூறு பாடல்களையும் ஒரு புலவரே பாடி யிருப்பார்.

நூறு பாடல்களும் பத்துப் பத்தாகத் தொகுக்கப்பட்டிருக்கும். ஐங்குநூறில் ஓரம்போகியார் எழுதிய மருதத்திணைப்பாடல்களில், 'புனலாட்டுப்பத்து' என்று பத்துப் பாடல்கள் உள்ளன. அவை அனைத்துமே மகளிர் ஆறுகளில் வரும் புதுப்புனலில் விளையாடித் திளைப்பதைக் காட்சிப்படுத்துகின்றன.

மழை பெய்து, ஆற்றில் புதுப்புனலானது கிள்ளிவளவனின் யானைபோல் செல்கிறது. 'வா, வந்து என் தோளைத் தழுவி புனலாடு' என்று ஒரு பரத்தை தலைமகனை அழைக்கிறாள்.

*"கதிரிமலை நெடுவேல் கடுமான் கிள்ளி*

*மதில்கொல் யானையின் கதழ்புநெறி வந்த*

*சிறையழி புதுப்புனல் ஆடுகம்*

*எம்மொடு கொண்மோ எம் தோள்புரை புனையே"*

*(ஐங்குறுந்நூறு 78)*

பசுந்தழை ஆடையணிந்து, மருதமரக் கிளையிலிருந்து நீருக்குள் பாய்ந்த பெண், வானத்திலிருந்து மயிலொன்று கீழிறங்கி வந்தது போல் காட்சியளித்ததாகத் தலைவன் கண்டு பிரமித்து நிற்கிறான்.

*"விசும்பிழி தோகைச் சீர் போன் றிசினே*

*பசும்பொன் அவிரிழை பைய நிழற்றக்*

*கரைசேர் மருதம் ஏறிப்*

*பண்ணை பாய்வோள் தண்ணறுங் கதுப்பே”*

*(74 ஐங்குறுநூறு)*

பெண்கள் தழையாடை அணிவது சங்க கால வழக்கில் இருந்திருக்கிறது. தழையாடை அணிந்த பரத்தை, தெருவில் நடந்து செல்கிறாள். அழகிய மேனியைக் கொண்ட மகளிர் அனைவரும், அவரவர் இல்லத்தில், தத்தம் கணவன்மாரைக் காத்து நின்றனர்.

*‘‘தழை அணிந்து அலமரும் அல்குல், தெருவின்*

*இளையோர் இறந்த அனைத்தற்கு*

*காவல் செரிய மாட்டி, ஆய்ந்தொடி*

*எழில் மா மேனி மகளிர்*

*விழுமாந்தனர் தம் கொழுநரைக் காத்தே”*

*(நற் 320)*

குறிஞ்சிநிலத் தலைவன், தலைவிக்குத் தழையாடை கொடுக்கிறான். தாய்க்கு அஞ்சி அதனை உடுக்காமல் இருப்பதாகத் தலைவி உரைக்கிறாள்.

*“உடுக்கும் தழை தந்தனனே யாம் அஃது*

*உடுப்பின், யாய் அஞ்சுதுமே”*

*(நற் 359)*

தழையாடை அணிந்திருந்தனர் என்பதால், அன்றைய தமிழர்கள் அனைவருமே தழையாடை அணிந்திருந்தனரோ என்னும் ஐயம் வருவது இயல்பு. ஆனால், சங்ககாலத் தமிழர்கள், பருத்திப் பயிரிட்டு, பஞ்சு எடுத்து, நூல் நூற்று, ஆடை அணிந்து இருக்கின்றனர். நூலாடை அணிந்திருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஒரு நற்றிணைப் பாடல் வரியை இங்கே குறிப்பிடுவதற்கு ஒரு காரணமும் உள்ளது.



*“ஆள் இல் பெண்டிர் தாளின்செய்த*

*நுணங்கு நுண் பனுவல் போல”*

*(நற் 353)*

இப்பாடல் வரிகளில், ”தாளின் செய்த, நுணங்கு நுண் பனுவல்” என்பது பஞ்சிலிருந்து நூற்கப்பட்ட நூலில் செய்த நுண்ணிய வேலைப்பாடுடைய ஆடையைக் குறிக்கிறது. இங்கே மற்றொரு செய்தியும் உள்ளது. பஞ்சிலிருந்து, நூல் நூற்றவர்கள், ’ஆள் இல் பெண்டிர்,” அதாவது கணவன்மார்களை இழந்த விதவைப் பெண்கள். கணவனை இழந்த பெண்கள், ஊரில் மற்றவர்களோடு சேர்ந்து வாழ்ந்திருக்கின்றனர் என்பதும் கூட ஒரு செய்தியாகக் கிடைக்கிறது.

சங்க காலத்து மகளிர், மருதமரம் ஏறி, அதன் கிளையிலிருந்து நீருக்குள் தலைகீழாகக் குதித்து விளையாடினார்கள் என்பது, அம்மகளிரின் உடல்வாகு, மனத்திண்மை, இயற்கையோடு இயைந்த வாழ்வு முறை, அதற்கானக் கட்டுப்பாடு இல்லாமை ஆகியவற்றை நமக்கு உணர்த்துகிறது.

இளம் பெண்கள் தமது தோழியருடன் சென்று நீராடியிருக்கின்றனர். தலைமகன்கள் பெரிதும் பரத்தையரோடு அப்படி சென்று விளையாடியிருக்கின்றனர். தனக்குப் பரத்தையரைத் தெரியாது என்று பொய்யுரைக்கும் போது, இதனைத் தலைமகள் சுட்டிக் காட்டுவதாகப் பல பாடல்கள் உள்ளன. ஆறுகளில் மட்டுமல்ல, கடல் நீரிலும் பாய்ந்து இறங்கி, நெய்தல் நிலத்து மகளிர் நீந்தி விளையாடிக் களித்திருக்கினறனர் என்பதற்குப் பல சங்க இலக்கியப் பாடல்கள் சான்றாக உள்ளன.

*“முண்டகக் கோதை ஒண்டொடி மகளிர்*

*இரும் பனையின் குறும்பை நீரும்*

*பூங் கரும்பின் தீஞ் சாறும்*

*ஓங்கு மணற் குவவுத் தாழைத்*

*தீ நீரொடு உடன் விராஅய்*

*முந்நீர் உண்டு முந்நீர் பாயுந்து...*

*(புறம் - 24:11-16, மாங்குடி கிழவர்)*

நெய்தல் மகளிர் இளம் நுங்கு நீரும், கரும்புச்சாறும், இளநீர் (தாழை என்பது தென்னையைக் குறிக்கும்) குடித்து கடல் நீரில் பாய்ந்து விளையாடினர்.

அக இலக்கியங்களில் மட்டுமல்ல புற இலக்கியத்திலும் இப்படி ”பண்ணை பாய்ந்ததற்கான குறிப்புகள் உள்ளன. இளமைக்காலத்தில் மகளிரொடு இணைந்து கைகோர்த்து விளையாடி, மருதமரக்கிளையில் ஏறி அங்கிருந்து 'துடும்' என ஆழமான நீரில் பாய்ந்து, மற்றவர்களைத் திரும்பிப் பார்க்க வைத்து, அடிமண் எடுத்துக் காதலியரு க்குத் தங்கள் வீரத்தைக் காட்டி பெருமிதம் கொண்ட காலம் இனி வருமா என்று தண்டு ஊன்றி நடக்கும் முதுமையில் வருந்துவது போலவும் ஒரு புறநானூற்றுப் பாடல் உள்ளது.

*‘‘இனி நினைத்து இரக்கம் ஆகின்று, திண்மணல்*

*செய்யுறு பாவைக்குக் கொய் பூத்தை*

*தண்கயம் ஆடும் மகளிரொடுகை பிணைந்து*

*தழுவு வழித்தழீஇ, தூங்குவழித் தூங்கி*

*மறை எனல் அறியா மாயம் இல் ஆயமொடு*

*உயர்சினை மருதத்துறை உளந்தாழ்ந்து*

*நீர் நணிபடி கோடு ஏறி, சீர்மிக*

*கரையவர் மருள, திரையகம் பிதிர,*

*நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து*

*குளித்த மணற் கொண்ட கல்லா இளமை*

*அனிதோ தானே! யாண்டு உண்டு கொல்லோ*

*தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி, நடுக்குற்று*

*இரும் இடை மிடைந்த சிலசொற்*

*பெருமூதான ரேம் ஆகிய எமக்கே.”*

*(புறம் 243, பாடியவர் தொடித்தலை விழுத்தண்டினார்)*

தை மாதத்துக் குளிர்ந்த நீரையுடைய நெடுநீர்க்குட்டம் என்பதால், மருத மரங்களைக் கொண்ட உயர்ந்த கரைகளை உடைய நீண்ட, ஆழமான ஏரி என்றும் புரிந்துகொள்ளலாம்.

தாமிரபரணிக் கரையில் மட்டுமல்ல, வைகை, காவிரி, காவிரியின் கிளை நதிகள் தென்பெண்ணை ஆற்றங்கரைகளிலும்,



நாஞ்சில் நாட்டிலும், குளக் கரைகளிலும், மக்கள் நீராடிடும் படித்துறைகளை நான் பார்த்திருக்கிறேன். அனைத்துமே, ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித் தனியாகவே அமைந்திருக்கின்றன. ஆனால், சங்க காலத்தில் அப்படிப்பட்ட பாகுபாடின்றி, ஆண்களும், பெண்களும் குளிப்பதற்கான, நீந்தி விளையாடுவதற்கான பொதுவில் அமைந்தத் துறைகளாகவே இருந்திருக்கின்றன. ஆண்கள், பெண்கள், சிறார்கள் அனைவரும் ஒரே துறையில் நீராடி மகிழ்ந்திருக்கின்றனர்.

சங்க இலக்கியங்களை வாசிக்கவாசிக்க நம் முன்னோர், உணவு, உடை, விளையாட்டுகள், தொழில், குடும்பம் என்று அனைத்திலும் முழுமையாக இயற்கையுடன் இயைந்த வாழ்வை வாழ்ந்திருக்கின்றனர் என்பது அறிந்து மகிழ்ச்சி ஏற்படுகிறது.

இந்த இருபத்தியொன்றாம் நூற்றாண்டில் உலகமயம், தொழில்நுட்பமயம் என்றெல்லாம் சொல்லி, இயற்கையை விட்டு விலகிய வாழ்க்கையை மேற் கொண்டதால் நாம் தொலைந்த வாழ்வில், மகிழ்ச்சி முதன்மையானதாக இருக்கிறது. நம் முன்னோர்கள், நமக்கு நல்லனவற்றை விட்டுச் சென்றார்கள். நாம் நம் பிள்ளைகளுக்கு எவற்றை விட்டுச் செல்லப்போகிறோம் என்பது கேள்விக்குறியாகவே நீடிக்கிறது.

**கட்டுரையாளர்**

**இயற்பியல் பேராசிரியர் (பணி நிறைவு)**

ஒரு பறவையின் பயணக் குறிப்புகள்

# அப்பாவும் சிகரெட்டும்

## பாலகுமரன் பரிதி

அப்பாவைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் சிகரெட் வாசம் அடிக்கிறது. ஆம். அப்பா சிகரெட் புகைப்பார்.

சிகரெட் பிடிப்பது என்றால் எல்லோரும் போல அவசர அவசரமாக இழுத்து அரைகுறையாகப் பாதியிலேயே சிகரெட்டை கீழே போட்டு மிதித்துச் செல்வதைப் போல் இருக்காது. அப்பா சிகரெடை ரசித்துப் புகைப்பார்.

சிறுவயதிலிருந்தே அப்பாவுக்கு சிகரெட் வாங்கி வருவது நான்தான். சிகரெட் மட்டுமல்ல வெத்தலை சீவல் கூட. அப்பா வெத்தலையை எடுத்து காம்பைக் கிள்ளி வெத்தலையின் இருபுறமும் சுண்ணாம்பைத் தடவி, சீவலுடன் மடித்து வாயில் போடுவார் அதை மென்று கொண்டே சிகரெட்டும் பிடிப்பார். வெற்றிலை மென்று, சிகரெட் பிடிக்கும்போது வரும் ‘சிகரெட் வாசம்’ வேறு மாதிரி இருக்கும்.

அப்பா சிகரெட் பிடிக்க கால அட்டவணை வைத்திருப்பார் என எனக்குத் தோன்றும். ஏனென்றால், தொடர்ந்து புகைத்துக் கொண்டே இருக்க மாட்டார். அதற்கென்று நேரம் இருக்கும். காலை எழுந்தவுடன் கழிவறைக்குச் செல்லும்போது சிகரெட்டுடன் செல்வார். பிறகு டீ குடித்துவிட்டு செய்தித்தாள் படித்துக் கொண்டே சிகரெட் பிடிப்பார். பின்னர் சாப்பாட்டுக்குப் பிறகு ஒரு சிகரெட். எப்போதெல்லாம் டீ குடிக்கிறாரோ அப்போதெல்லாம் சிகரெட். எப்போதெல்லாம் சாப்பிடுகிறாரோ அதற்கு பிறகு ஒரு சிகரெட். சில நாட்களில் நள்ளிரவு வேளைகளில் தூக்கமின்றி ஏதோ ஒரு புத்தகத்தை வாசித்துக்கொண்டு, புகைத்துக் கொண்டு இருப்பார்.

வெளியில் செல்லும் போது சிகரெட் பிடிப்பதற்கு அப்பா சில இடங்களைத் தேர்வு செய்து வைத்திருந்தார்.

நான் அர்பன் பாங்கு தொடக்கப் பள்ளியில் படித்தபோது பள்ளி முடிந்து சைக்கிளில் அப்பாவும் நானும் காளவாய்க் கரை வழியாக புதிய வீட்டு வசதி வாரியம் நோக்கி வருவோம். அப்போது வழக்கமாக ஒரு கடையில் நிறுத்தி அவருக்குசிகரெட்டும் எனக்கு தின்பண்டங்களும் வாங்கிக்கொண்டு இப்போது இருக்கும் ஷிஙிகி ஸ்கூல் அருகே உள்ள பெரிய புளியமரம் (அந்த மரம் இப்போது இல்லை) அருகே சைக்கிளை நிறுத்தி என்னை சைக்கிள் கேரியரில் உட்காரவைத்து விட்டு சிகரெட் புகைத்து விட்டு மீண்டும் சைக்கிளை மிதிப்பார்.

இருசக்கர வாகனத்தில் நானும் அப்பாவும் திருவாரூர் நோக்கி செல்லும்போது சவளக்காரன் அருகே மரங்கள் சூழ்ந்த இடத்தில் சாலையோரத்தில் வண்டியை நிறுத்தி சிகரெட் புகைப்பார். அதுவே திருத்துறைப்பூண்டி நோக்கிச் சென்றால் தட்டான்கோயில் பாலத்திற்கு முன்னர் சாலையோர மரத்தடியில் சிகரெட் புகைப்பார். கும்பகோணம் சென்றால் நீடாமங்கலத்திற்கு முன்னே, சாலையோர மரத்தடியில் சிகரெட் உள்ளிக்கோட்டை நோக்கி சென்றால் மேல நாகை அருகே நாவல் மரத்தின் கீழே சிகரெட் இப்படி எல்லாத் திசைகளிலும் அவருக்கென்று சில மரங்கள் இருந்தன.

அவர் நினைத்தால் சிகரெட் வாங்கிய கடை வாசலிலேயே பற்ற வைக்கலாம் ஆனால் அப்படி செய்ய மாட்டார். ஏனென்றால், அப்பா ரசித்து புகைப்பவர்!

ஏன் இப்படி குறிப்பிட்ட இடங்களில் நிறுத்தி சிகரெட் பிடிக்கிறீர்கள்? என நானும் கேட்டதில்லை அவரும் சொன்னதில்லை.

அப்பா ஆசிரியராக இருந்தார். பள்ளியில் புகைபிடிக்க மாட்டார். பணிபுரியும் பள்ளி அமைந்துள்ள ஊரில் புகை பிடிக்க மாட்டார் என அப்பாவின் நண்பர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். கொள்கையாகக் கூட இருக்கலாம்.

ஒருமுறை அப்பாவுக்குத் தொடர் இருமல். மருத்துவரை சந்திக்க சென்றிருந்தோம். மருத்துவர் அப்பாவிற்கு நண்பர் என்பதால், ”நீங்கள் எதற்கும் டிபி டெஸ்ட் எடுத்து விடுங்க” என்றார். அப்போதிலிருந்தே அப்பாவுக்குப் பதற்றம் தொற்றிக் கொண்டது. ‘டிபி டெஸ்ட்’ கொடுத்தோம். நெகட்டிவ் என ரிசல்ட் வந்தது அப்பாவுக்கு அளவில்லாத சந்தோஷம். வெளியில் வந்தவுடன் பெரிய ஆஸ்பத்திரி எதிரே உள்ள டீக்கடையில் டீ குடித்து விட்டு சந்தோஷமாக சிகரெட் பிடித்தார்.

மீண்டும் மருத்துவரிடம் சென்றோம் ‘‘எனக்கு டிபி இல்லைன்னு சொல்லிட்டாங்க” என்றார் அப்பா. ”சரி சார்... எதுக்கும் ஒரு தர ஸ்கேன் எடுத்து பார்த்து விடுவோம்” என்றார் மருத்துவர். அதற்கு நிதானமாக ”டாக்டர் 20 வயசுல சிகரெட் பிடிக்க ஆரம்பிச்சேன். 40 வருஷமா பிடிக்கிறேன், நீங்க ஸ்கேன் எடுத்துப் பார்த்தால் கருப்பாத் தான் தெரியும், அதனால ஒரு டானிக் எழுதிக் கொடுங்க” என சிரித்துக்கொண்டே சொன்னார்.

அப்பா சிகரெட் பிடிக்கக் கூடாது என அம்மா

சண்டை போட்டதாக எனக்கு நினைவில்லை. நான் ஆசீர்வதிக்கப்பட்ட குழந்தையாக இருக்கலாம் போல. ஏனென்றால் அப்பாவும் அம்மாவும் சண்டை போட்டு நான் பார்த்ததில்லை. அவர்களிடையே சண்டை வராதா., இல்லை எனக்கு முன்னால் சண்டை போட மாட்டார்களா? எனத் தெரியவில்லை.

பணி ஓய்வு பெற்ற பிறகு அப்பா பொழுதுபோக்கிற்காக பின்லே மைதானத்திற்கு எதிரே ஒரு பெட்டிக்கடை வைத்தார். பேருக்குத்தான் கடை. ஆனால் அப்பாவிற்கு அவரே பிடித்துக்கொண்ட தனியறை என்று கூட சொல்லலாம். புத்தகங்கள் படிப்பார். ஏதாவது எழுதிக் கொண்டிருப்பார். நண்பர்களை கூட்டி இலக்கியம் பேசுவார். இடையிடையே சிறு சிறு வியாபாரம் நடக்கும்.

கடை வைத்த பிறகு அப்பா சிகரெட் பிடிக்கும் அளவு குறைந்தது. ஒருநாள் விளையாட்டாக "என்ன இப்பெல்லாம் சிகரெட் பிடிக்கிறது இல்லை?" என்று கேட்டேன் அதற்கு அப்பா, ஒரு சிகரெட் பெட்டி எடுத்துக் காட்டி "இதுல பத்து சிகரெட் இருக்கும்டா பத்தையும் வித்தா ஒரு சிகரெட் விலை நமக்கு லாபம் அதையும் நானே குடிச்சிட்டா நட்டம் ஆயிரும்ல" என்றார் பரம்பரை வணிகர் போல.

பொங்கல் தினத்தில் வழக்கம் போல எங்கள் குடியிருப்பில் இரவு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்போது அப்பாவிடம் இருந்து அழைப்பு "சிகரெட் வாங்கி கொடுத்துவிட்டு போடா" என்று. அதுதான் அப்பா என்னிடம் கடைசியாக பேசியது. அப்பொழுது நான் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்துக் கொண்டு இருந்ததால், உடனே நண்பன் உதயனிடம் சிகரெட் வாங்கிக் கொடுக்கச் சொன்னேன் "நான் அவனிடம் சொன்னால் உன்னை அனுப்பி இருக்கிறானா?" என அவனிடம் என்னைக் கடிந்து கொண்டாராம்.

நான் கல்லூரியில் சேர்ந்த புதிதில் ஒரு நாள் வழக்கம் போல அப்பாவிற்கு சிகரெட் வாங்கி வந்து கொடுத்தேன். அதை வாங்கிக்கொண்டு "டேய் பாலா சிகரெட் பிடிக்க மட்டும் கத்துக்காதடா, அப்புறம் நிறுத்த முடியாது" என்றார். நானும் சரி என்று தலையாட்டினேன்.

இன்றுவரை நான் சிகரெட் புகைத்தது இல்லை. ஆனால் எனக்கு அந்த வாசம் பிடிக்கும். ஏனென்றால் அது எனக்கு அப்பா வாசம்.

# *யசோதை அழுகிறாள்!*

*காவல் தெய்வங்களும் கடைசி கண்காணிப்பை*
*முடித்து விட்டு ஓய்வெடுக்கும் தருணத்தில்*

*கட்டிலில் என்னையும் தொட்டிலில் குழந்தையையும்*
*விட்டு கடந்து போன கௌதமனே!*

*ஞானம் தேடி நீ நடந்து போன தடத்தில்*
*ஒற்றை மலர் கூடவா என் ஸ்பரிசத்தை*
*உணர்த்தவில்லை உன்னிடம்!*

*புணர்ந்து விலகும் தருணங்களில்*
*என் உயிர்சுடும் மூச்சினை*
*ஒருமுறை கூடவா*
*உணரவில்லை கானகத்து வெப்பத்திடம்?*

*குழலிசை மொழி பேசும் நம் மழலையின் குரல் கூடவா*
*தடுத்தாட் கொள்ளாமல் தவறவிட்டது உன்னை?*

*என்னுடனான ஊடலில் தான்*
*பிரிந்து போனாய்_என*
*பிரிய மகன் புரிந்துகொண்டால் கடைத்தேறுமா*
*என் கடைசிக் காலம்!*

*அதெல்லாம் உனக்கு எதற்கு நீ மோனத் தவத்தில் மூழ்கித் திளைத்திடு!*
*உண்டிச் சுருக்கி உயிரின் ஆற்றல் பெருக்கு!*
*மூலாதாரம் துவங்கி*
*துரியத்தில் மலர்ந்து போ!*

*சிற்றின்ப நதி கடந்து*
*பேரின்ப பிரவாகத்தில்*
*கரைந்து போ!*
*கடைசி மனிதனுக்கும் ஞானம் கொடு!*

*உனது*
*உடல் கூட்டை விட்டு உயிர்*
*பிரியும் போதாவது*
*நினைத்துக் கொள் நீயும் என்னை இப்படித் தான் பிரிந்தாயென்று!*

**- மன்னை மணிவண்ணன்**

அகழ்தல்

# நோடி நோண்டி

## ஆ.அரிமாப்பாமகன்

*“பட்டிக்காடா பட்டணமா*

*ரெண்டும் கெட்டான் லெட்சணமா*

*ஆட்டம் பார்த்து நோட்டம் பார்த்து*

*ஆளை முடிவு கட்டணுமா”*

*(கண்ணதாசன், மாட்டுக்கார வேலன்)*

“நுல் - நுள் - நோள் - நோடு, நோடுதல் = ஆய்ந்து பார்த்தல் இவ் வினை இன்று வழக்கற்றது. க. நோடு”

*(தேவநேயப் பாவணர். வேர்ச்சொற் கட்டுரைகள்)*

நோடு - நோண்டுதல், நோண்டுக (ம) = கிளறுதல் (பிங்) ஆராய்தல்.

‘நோண்டி நுங்கெடுத்தல்’ = துருவி ஆராய்தல் (பேச்சுவழக்கு)

துருவுதல் > trouver (French).

‘எதையாவது நோண்டிக் கொண்டே இருத்தல்’



நோடு = நோட்டம், நோட்டமிடல் = கணக்குப் பண்ணுதல்.

நோடு - நோட்டம் = நோக்கம்

‘நோடு’, என்னும் வினைச்சொல் தமிழில் வழக்கூன்றவில்லை, கன்னடத்தில் இன்றும் பேச்சு வழக்கில் உள்ளது.

நோடு - நோடி = பாருங்கள்

தமிழில் நோடு திரிந்து நாடு, நேடு என வழங்கிவருகிறது.

நாடு = ஆராய்தல், தேடுதல்.

“எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து

சொல்லிய பள்ளி எழுதரு வளியின்

பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து

அகத்து எழு வளி இசை அரில் தப நாடி

அளபின் கோடல் அந்தணர் மறைத்தே”

*(தொல்காப்பியம், எழுத்ததிகாரம், பிறப்பியல் 20)*

அரில் தப நாடி = குற்றம் அற ஆராய்ந்து

“தமவும் பிறவும் ஒப்ப நாடிக்

*கொள்வதூஉம் மிகை கொளாது கொடுப்பதூஉம் குறை கொடாது”*

*(பட்டினப்பாலை 209-210)*

*”நினக்கு யாம் யாரேம் ஆகுதும்”* என்று

வனப்பு உறக் கொள்வன நாடி அணிந்தனள்,”

*(கலித்தொகை 82.1819)*

உரை; உன் மகன் மேலும் அழகாகத் தோன்றும் வகையில் ஒத்த அணிகலன்களைத் தேடிக் கொண்டுவந்து அணிவித்தாள்.

*“குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*

*மிகை நாடி மிக்க கொளல்”*

*(திருக்குறள் 504)*

*”நாள்தொறும் நாடி முறைசெய்யா*

மன்னவன்

நாள்தொறும் நாடு கெடும்,"

(திருக்குறள் 553)

"நாடி = ஆராய்ந்து.

''வாழ்வதோர் உபாயம் நாடி மதி உடம்பட்டு வல்லே"

(சீவக சிந்தாமணி 1163.1)

"நல்லவும் தீயவும் நாடி நாயகற்கு"

(கம்பராமாயணம், அயோத்தியா காண்டம் 1,9.1)

"தேடிச் சென்று திருந்து அடி ஏத்துமின்–

நாடி வந்து அவர் நம்மையும் ஆட்கொள்வர்;

ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ

ஓடிப்போம் தமது உள்ள வினைகளே!"

(அப்பர் தேவாரம் 1116.)

நாடி வந்து = தேடி வந்து

"வாடினேன் வாடி வருந்தினேன்

மனத்தால் பெரும் துயர் இடும்பையில் பிறந்து

கூடினேன் கூடி இளையவர் தம்மோடு

அவர்தரும் கலவியே கருதி

ஓடினேன் ஓடி உய்வது ஓர் பொருளால்

உணர்வெனும் பெரும் பதம் திரிந்து

நாடினேன் நாடி நான் கண்டுகொண்டேன்

நாராயணா என்னும் நாமம்"

(நாலாயிரத்தெய்வப் பனுவல் 948)

நாடிக் கண்டுகொண்டேன் = ஆராய்ந்து தெளிந்தேன்

''எனக்குத்தாய் ஆகியாள் என்னையீங் கிட்டு

தனக்குத்தாய் நாடியே சென்றாள் தனக்குத்தாய்

ஆ கி ய வ ளு ம் அ து வ ா ன ா ல் தாய்த்தாய்கொண்டு

ஏகும் அளித்திவ் வுலகு."

(நாலடியார் 15)

உரை; எனக்குத் தாயாக இருப்பவள்

என்னை இங்கு போட்டு விட்டாள்.

தனக்குத் தாயாக இருப்பவள்

இருக்க வேண்டிய இடத்தைத் தேடிக் கொண்டு சென்று விட்டாள்



அவளுக்குத் தாயாகிய பாட்டியும் அப்படித்தான் தாய் தாய் தாய் என்று

வளர்ந்து கொண்டே இருக்கிறது.

பிறவி நீக்குவது எப்படி?

நேடு;

''தோய்ந்தும் பொருள் அனைத்தும் தோயாது நின்ற

சுடரே– தொடக்கு அறுத்தோர் சுற்றமே– பற்றி

நீண்ட அரிய நெடுங் கருணைக்கு எல்லாம்

நிலயமே– வேதம் நெறி முறையின்நேடி

ஆய்ந்த உணர்வின் உணர்வே– பகையால்

அலைப்புண்டு அடியேம் அடி போற்ற அந் நாள்

ஈந்த வரம் உதவ எய்தினையே? எந்தாய்–

இரு நிலத்தவோ, நின் இணை அடித் தாமரைதாம்?"

(கம்பராமாயணம், ஆரண்ய காண்டம் 2,27)

நேடி ஆய்ந்த உணர்வின் ஆராய்ந்து ஆய்ந்த

நேடு ஆய் - ஒரு பொருட் பன்மொழி

"மார்பகமும் தசை நைந்து சிந்தி வரிந்த என்பு முரிந்திட

நேர்வரும் குறி நின்ற சிந்தையின் நேசம் ஈசனை நேடும் நீடு

ஆர்வம் அங்கு உயிர் கொண்டு உகைக்கும் உடம்பு அடங்கவும் ஊன் கெட

சேர் வரும் பழுவம் புரண்டு புரண்டு சென்றனர் செம்மையோர்"

(பெரியபுராணம், திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம் 359)

"ஆட்சியின் துணையை நேடி அருமறை உணர்ந்த ஓதி"

(தேம்பாவணி 26,3.2)

''நெடியமால் பிரமனு நீண்டு மண்ணிடந்தின்ன நேடிக் காணாப்

படியனார் பவளம்போல் உருவானார் பனிவளர் மலையாள் பாக

வடிவனார் மதிபொதி சடையனார் மணியணி கண்டத் தெண்டோள்

அடிகளா ரூர்தொழு துய்யலா மையல் கொண்டஞ்ச னெஞ்சே–"

(ஞானசம்பந்தர் தேவாரம் 2333)

உரை : நெஞ்சே– நெடிய உருவெடுத்த திருமால், பன்றி உருவெடுத்து மண்ணிடந்தும், பிரம்மன் அன்னவடிவெடுத்துப் பறந்து சென்றும் இன்றுவரை தேடிக் காணாத நிலையில் தன்மையால் உயர்ந்தவரும், பவளம் போன்ற உருவினரும் இமவான் மகளாகிய பார்வதி தேவியைப் பாகமாகக் கொண்ட வடிவினரும், பிறையணிந்த தலைமுடியினரும் நீலமணி போன்ற அழகிய கண்டத்தினரும் எட்டுத் தோள்களைக் கொண்டு உள்ளவரும் ஆகிய ஆரூர் அடிகளைத் தொழுதால் உய்யலாம். மையல் கொண்டு அஞ்சாதே–

நுல் நுழை

"ஆள் சரியான நுழை நரி" என்பது பேச்சு வழக்கு– நோட்டம் பார்க்கும் ஆள் குள்ள நரி

NB = note below x, = nota bene√ (Latin).

= note well.

French notarie "scribe, clerk, secretary" (12c.) and directly from Latin notarius''

சொலவடைகள்;

ஒரு பார்வை பார்ப்பது 'சும்மா ஒரு நோட்டமுட்டுட்டு வந்த' (கொங்கு, சோழமண்டல வடக்கு)

'கட்டின வீட்டுக்கு நோட்டம்நொனாட்டம் பேசுதல்'

'பிறவிக் குருடனுக்குப் பண நோட்டம் தெரியுமா?'

நுல் நோள் நோடு > note இதன் மூலம்



தெரியவில்லை எனப்படும் சொல்–

note, notice, nota bene, notary public, notaire (f), notice, notify, notation, annotate,....

note (n.)

c. 1300, "a song, music, melody; instrumental music; a bird-song; a musical note of a definite pitch," from Old French note and directly from Latin nota "letter, character, note," originally "a mark, sign, means of recognition," which traditionally has been connected to notus, past participle of noscere "to come to know," but de Vaan reports this is "impossible," and with no attractive alternative explanation, it is of unknown origin.

Meaning "notice, attention" is from early 14c.; that of "reputation, fame" is from late 14c. From late 14c. as "mark, sign, or token by which a thing may be known." From late 14c. as "a sign by which a musical

tone is represented to the eye." Meaning "a brief written abstract of facts" is from 1540s; meaning "a short, informal written communication" is from 1590s. From 1550s as "a mark in the margin of a book calling attention to something in the text," hence "a statement subsidiary to the text adding or elucidating something." From 1680s as "a paper acknowledging a debts, etc." In perfumery, "a basic component of a fragrance which gives it its character," by 1905.

''இது ''நோடு" என்ற தலைப்பில் என் 'இயம்பும் எம்மொழி' நூலில் உள்ள கட்டுரையின் விரிவு.

கவிதை

# ‘செல்’லாலான மனிதர்கள்

பரிதிபாண்டியன்

‘**வா**ங்க’ என்பதாகத்
தலையசைத்தார்
‘செல்’ பேசிக்கொண்டிருந்தார்
முகபாவனை அடிக்கடி மாறியது
வலது கையை ஆட்டி ஆட்டிப் பேசினார்
‘இல்ல’ என்றார்
‘அப்படியா’ ஆச்சரியப்பட்டார்
‘ச்சச்சச்செ’ மறுத்தார்
‘சரி சரி’ ஆமோதித்தார்
‘நாளைக்கு பார்ப்போம்‘ சொன்னார்.

செல்லை நிறுத்தி,
என்னை ‘வாங்க’ என்றார்.

செல் அடித்தது
பெயர் பார்த்து ‘வணக்கம்‘ சொன்னார்
குரலில் பவ்யம் காட்டினார்
‘சரி சரி’ கடைசி வரை சொல்லிக் கொண்டிருந்தார்
‘வைச்சுடவா...வைச்சுடவா’
சொல்லி வைத்துவிட்டு

‘அப்பறம் சொல்லுங்க சுந்தரம்‘ என்றார்.

செல் அடித்தது
விலகிச் சென்று ‘ம்..ம்‘ என்றார்
‘சரி... வைச்சுடுங்க’ என்றார்.

நான் சிறிது தொலைவு சென்று விட்டேன்..
என்னை காணமே என்று தேடி இருக்கலாம் அல்லது
மறுபடி செல் அடித்திருக்கலாம்!

வீடு சென்று தொடர்பு கொண்டேன்..
‘சொல்லுங்க சுந்தரம்‘ என்றார்
பேசிக்கொண்டோம்
தொந்தரவின்றி!



# கூர்



கீழப்பழுவூர்
சின்னசாமியின்
நெருப்புக்குரல்
கொன்று
கேட்கிறது
“எப்படி
இருக்கீங்க ஜி?”

சுடப்பட்டு
விழுந்த
ஐயாவு பிரான்சின்
குருதி தொட்டு
பெயர் எழுதுகிறான்
“ஸ்ரீஹரி”

கலியபெருமாளின்
மானத்தமிழ்
நறுக்கி எறிந்த
நகத்தைப் போல
கிடக்கிறது
கேந்திர வித்யாலயா வாசலில்.

ஆறுமுகச்சாமியைத்
தள்ளிவிட்டவர்களுக்குப் பயந்து
சமற்கிருதம்
கற்க
சென்றுவருகிறார்
நடராசர்.

அனிதாவின்
துக்கத்திற்குப்
போய்வந்த
கையோடு
நுழைவுத்தேர்வு
வகுப்பு தொடங்கியிருக்கிறது
அரசு.

கல்வியிலிருந்து
தமிழை
வெளியேற்றிய
கட்சிகள்
கொண்டாடுகின்றன
மொழிப்போர் நாள்.

‘அடிமைக்கு
எதற்கு மொழி?’
முடிவு
கட்டியிருக்கிறார்கள்
அவர்கள்.
அவர்களைக்
குறிவத்து
மொழியைத்
தீட்டிக் கொண்டிருக்கின்றோம்
நாங்கள்.

**– த.ரெ.தமிழ்மணி**

# கிறுகிறுத்த கவிதை

- சா. சிவகுமார்.

குளிரால் வதைக்கும்
மார்கழித் திங்கள் நீ...
பருவப் பனியாய் இறங்கி
காதல் முத்துக்களைப்
பிறப்பிக்கிறாய்...

முருகனாய்
ஏழுலகம் சுற்றி வந்தும்
பெற முடியவில்லையே
உன் கண் கனியை..

கற்பனைக் கெட்டாத
கண்ணுனக்கு
எதையும்
விற்பனைக்கு வைக்காத
புலவன் நான் கேட்கிறேன்
கண் கருநெல்லி கொடுத்து
காப்பாற்று...

கடை விரிக்காது
பேரழகைப் பொத்தி வைக்கும்
உடை தரித்த பெண்ணே...
கடைக்கண் காட்டு...

உன் மனக் கனி
கனியட்டுமென்று காத்திருக்கும்
சிறு கிளி நான்.
எட்டிக்காயென எட்டி நில்லாதே...
இலவங்காயென முதிர்ந்து
பஞ்சாய்ப் பறக்காதே...
கனி கனிவதுதானே
இயற்கையின் கணக்கு
பசித்தோர்க்குத் தருவதுதானே
உலகத்து வழக்கு...

உன்னிதழ் பூவிதழ்...
இவன் யாரோ? எவனோ?
ஏது செய்வானோ?
எப்படிப்பட்டவனோ?
என்றெண்ணி ஒதுக்காதே
இது அயல் மகரந்தச் சேர்க்கையன்று...
நான் உன்னவன்தான்...
உனக்குள்ளே இருப்பவன்தான்...
பெண்ணே..!
இது தன்மகரந்தச் சேர்க்கைதான்
தள்ளிப் போகாதே...

உன்னிதழ் பூவிதழ்
உன் மணத்தை
ஊரெல்லாம் புகழும் நான்
செய்தி இதழ்...

உன் கண்மொழி
என்ன மொழி?
ஒவ்வொரு மொழியாய்ப்
பெயர்த்துக் கொண்டே இருக்கிறேன்...
உன்கண் கணக்கு என்ன கணக்கு?
தமிழின் நெடுங்கணக்கா..?
கணக்குப் பாட
முடிவிலி கணக்கா..?
உன் கண் சொல்லும் கதை
என்ன கதை...?
நெடுங்கதையா...?
விடுகதையா...?

உன் கண்மலரில் மொய்க்கின்ற
வண்டு நான்..
மதுவுண்ட நான்
மலர் மஞ்சத்தில்..
கிறுகிறுத்த நானென்
நினைவுகளைக் கிறுக்குகிறேன்.
என் சொற்களும் என்னைப் போலவே
கிறுகிறுத்துக் கிடக்கின்றன...
அதைப் படிப்பவர்களும்
கிறுகிறுத்துப் போய்ச்
சொல்கிறார்கள்
அதன் பெயர் கவிதையென்று

# சங்க இலக்கியக்கண்ணி

## பாவலர் நா.இராசாரகுநாதன்



**த**மிழின் சங்க இலக்கிய சங்கிலித் தொடரின் கண்ணியாகப் பாவலர் த.ரெ.தமிழ்மணியின் "பாடாண்திணை" வெளிவந்திருக்கிறது. பாணன் மொழியில் பாவலர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல "பாடுவதற்கு தகுதியுடைய ஆளுமையாளரின் கல்வி, வீரம், அன்பு, கொடை, முதலியவற்றைப் போற்றிப் பாடுவது பாடாண் திணை" எனும் வரையறைக்கு ஏற்ப இந்நூலின் பாடுபொருள் நாயகர்கள் தற்காலத் தமிழ் மண், மொழி, இன விடுதலைக்குப் பாடாற்றி வருபவர்களும், உயிரீகம் புரிந்த தகைமையர்களும் ஆவர்.

"நம் விடுதலைக்காக உழல்பவர்களை நாமே பாடாவிட்டால் எப்படி? என்ற பாவலரின் உள்ளக்கிடக்கையை இப்பாதொகுப்பு நிறை வேற்றியிருக்கிறது. பல்வேறு காலகட்டத்தில், பல்வேறு அரங்குகளில், தமிழர் தலைமைகளைக் குறித்து பாவலர் பாடிய பாக்களின் அணிவகுப்பே இந்நூல். தமிழ்நாடு, தமிழீழம் என்ற தாய் முலைகளின் தகிப்பே "பாடாண் திணை".

தோழர் பெ. ம, பேரா.த.செயராமன், தோழர் பொழிலன், செங்கொடி, தழல் ஈகி முத்துக்குமார், பேரறிவாளன், அற்புதம் அம்மாள், தூரிகைப் போராளி வீரசந்தானம், தோழர் அ.கோ.கசுதூரிரங்கன், முள்ளிவாய்க்கால் ஈகியர் உள்ளிட்டோரின் உழைப்பை, ஈகத்தை "சூடிக்கொடுத்த சுடர்க் கொடியாய்ப் பாமாலை சூட்டி தன் பெருங்காதலை வெளிப்படுத்தியுள்ளார் த.ரெ.தமிழ்மணி.

"சான்றோன் மொழி" "பொருநன்மொழி" எனும் வகைமையில் மக்கள் மருத்துவர் இலரா.பாரதிச்செல்வன், உணர்ச்சிப் பாவலர் காசி ஆனந்தன் அவர்களின் அறிமுக உரைகள் நூலின் செம்மைக்கு



செருக்கேற்றுகின்றன.

*"நிலத்தடி வற்றி குடங்களில் நிரம்புகிறது கானல்"*

*எனும் வரிகளை வாசிக்கையிலையே நெஞ்சு பதறுகிறது.*

*"கால ஓவியனுக்குக் காலமாதல் ஏது?*

வாழ்ந்து கொண்டிருக்கிறார் அடக்கு முறைறக்கு எதிரான வண்ணங்களில்!" என்று வீரசந்தானம் குறித்த த.ரெ.தமிழ்மணியின் எழுத்துகள் உண்மையின் வரைதாளாகும்.

தமிழ்நாட்டில் தமிழ்த்தேசிய எழுச்சி தனிப்பெரும் அரசியல் எழுச்சியாகக் கொழுந்துவிட்டு எரிவதற்குத் தழல் ஈகி முத்துக்குமாரின் உயிரீகம் முகாமையானது..

"விதைகள் நீரினால் பரவும் காற்றினால் பரவும் இதோ நெருப்பால் பரவியிருக்கிறது ஒரு போர் விதை!" என்ற பாவலரின் பாடல்வரிகள் காலம் தோறும் முத்துக்குமாரின் ஈகத்தைப் பறை அடித்துக்கொண்டே இருக்கும்.

வெப்பத்தையும் பெருஞ்சத்தத்தையும் ஒருசேர எழுப்பிக் கொப்பளிக்கும் எரிமலை போல "பாடாண் திணை" பாக்கள் சத்தியத்தை நித்தமும் நேசிக்கும் நெஞ்சின் குமுறலாய் வெம்மைக் கூட்டுகின்றன.

*"தோன்றுவன் மாதோ",*

*"பனையின் பாட்டு",*

*"தலைவர் 60"* உள்ளிட்ட தலைப்புகளே பாடாண் திணையின் வேர்களை வெளி உலகிற்குக் காட்டும் விழுதுகள்.

தமிழைக் கைப்பொருளாகக் கருதாமல் கைவாளாகக் கருதும் படை வீரர் வரிசையில் முன்கள வீரரான ஐயா த.ரெ. தமிழ்மணியின் "பாடாண் திணை" பல்கிப் பெருகட்டும்!. அதற்கேற்றாற்போல் தமிழ்ச் சமூகத்தில் அறவோரும், ஈகியரும் பெருகட்டும். தமிழர் தாயகங்கள் விடுதலை பெறட்டும்.

**நூல் அறிமுகம்**

**நூலின் பெயர்: பாடாண் திணை**

**ஆசிரியர்: த.ரெ.தமிழ்மணி**

**பக்கங்கள்: 56**

**வகை: பாத்தொகுப்பு**

**வெளியீடு: பாவாணர் பதிப்பகம்**

**வேலங்குடி,**

**கீழப்படுகை,**

**திருவாரூர் 610109**

**தொடர்புக்கு: 9842011344**

**விலை:60/ரூ**



# பரிதி எனும் மானுடன்

**அம்ரா பாண்டியன்**

பரிதிபாண்டியன் காலம் தந்த மகத்தான இலக்கியன்– படிப்பதும் விமர்சிப்பதும் எழுதுவதும் அவர் சுவாசமாகவே கடைசி வரை இருந்து வந்தது–

பரிதி என்று எங்களால் செல்லமாக அழைக்கப்படும் பரிதிபாண்டியன் இல்லாமல் ஐந்தாண்டுகள் கடந்து சென்று விட்டது.

ஆனால் அவர் என் வீட்டுக்கு அடிக்கடி வருவதும் இலக்கியம் குறித்து மனம் திறந்து உரையாடுவதும் அடிக்கடி நினைவில் வந்து போகிறது.

அவர் மன்னார்குடி பின்லே மைதானம் அருகே கடை வைத்திருந்த போது, தினசரி நான் நடைப்பயிற்சியை மாலை வேளைகளில் அவரது கடை வரை பேசுவதற்கு என்றே நீட்டித்துச் செல்வேன். என்னைப் பார்த்தவுடனே அவர் உற்சாகமாகி விடுவார். ”கொஞ்சம் இருங்க” என்று சொல்லிவிட்டு மைதானத்துப் பக்கம் ஒதுங்கி சிகரெட் ஒன்றை பற்ற வைத்துப் புகைத்து முடித்துத் தன்னை சுறுசுறுப்பாக்கிக் கொண்டு திரும்புவார். அதற்குள் நான் அவரிடம் அவ்வப்போது இலக்கிய இதழ்களில் வருகிற கதைகள், கவிதைகள், கட்டுரைகள் மற்றும் படைப்புகள் பற்றிப் பேச என்னைத் தயார்படுத்திக் கொண்டு காத்திருப்பேன். வந்தவுடன் ”சொல்லுங்க என்ன படித்தீர்கள்?” என்று கேட்டுப் பேச்சை ஆரம்பிப்பார்.

நானும் காலச்சுவடு, காக்கைச் சிறகினிலே துவங்கி கணையாழி, உயிர்மை வரை படித்த படைப்புகளைப் பற்றி என்னுடைய கருத்துக்களைப் பேச ஆரம்பிப்பேன். அவர் ஏற்கனவே அந்த இதழ்களை எல்லாம் படித்து முடித்து அதைப் பற்றிய ஒரு பார்வையை உள்வாங்கி வைத்திருப்பார். கடை வரும் வாடிக்கையாளர்களிடம் பொருள்களைக் கொடுத்தபடியே எங்களது விமர்சனப் பார்வையோடு கூடிய உரையாடல் நீண்டு கொண்டே செல்லும்.

சமகாலத்தில் புரியாத எழுத்துக்களை எழுதுபவர்களைப் பற்றி அவருக்குக் கடுமையான விமர்சனம் இருந்தது. ”அதற்காகவாவது நீங்கள் ஓர் இதழ் தொடங்க வேண்டும்” என வேண்டிக் கொண்டே இருப்பார்.

கொஞ்ச காலத்தில் இதழ் பதிவு செய்து துவங்கப்பட்டது. ”கருக்கல் விடியும்” என் பெயரில்– அதற்காக நானும், அவரும் திருவாரூர் ஆட்சியர் அலுவலகப் படிக்கட்டுகளில் ஏறி இறங்கியது கொஞ்சநஞ்சமன்று. எனக்கு முழு

உந்து சக்தியாகவும் அவரே இருந்தார். முதல் முதல் கருக்கல் விடியும் வந்த போது அவர் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை. இதழினைக் கையில் வாங்கித் திருமணமாகி முதல் பிள்ளையைக் கைகளில் வாங்கித் தடவிப் பார்த்து ஆனந்தம் அடைகிற ஒரு தகப்பன் போல, ஒரு ரோஜாப்பூவை மென்மையாக ஸ்பரிசிக்கிற ஒரு காதலன் போல தடவிக் கொடுத்து பரிதி பாண்டியன் ஆனந்தத்தோடு "நாம ஜெயிச்சிட்டோம் பாண்டியன்" என்று சொன்ன அந்த கணம் இன்றும் பசுமையாக என் நினைவில் இருக்கிறது...

"கருக்கல் விடியும்" முதல் இதழிலேயே ''சுட்டுவிரல்" என்ற தலைப்பில் தல தோனியைப் போல அவர் மட்டைக்குப் பதில் பேனா பிடித்து விளாசித்தள்ளத் துவங்கிவிட்டார். எள்ளலும் பகடியும் கூடவே ஆக்ரோஷமும் மிக்க எழுத்துகளோடு அவர் விமரிசிக்காத ஆளுமைகளே கிடையாது. பெருமாள் முருகன், நாஞ்சில் நாடன் துவங்கி காலம் சென்ற ஞானக்கூத்தன் வரை அவர் காரணத்தோடு பலரையும் விமர்சனம் செய்த போது சம்பந்தப்பட்டவர்கள் அதற்குப் பதில் தர முன்வரவில்லை என்பதே உண்மை. நான் சம்பந்தப்பட்டவர்களுக்கு இதழ்களை அனுப்பியும் தொலைபேசியில் பேசியும் இதற்கு உங்கள் எதிர்வினையை எதிர்பார்க்கிறோம் என்று சொன்ன போதும் அவர்கள் பேசுவதற்கு ஒன்றுமில்லை என்று சொல்லி ஒதுங்கியதை நான் அறிவேன்... அந்த காத்திரமான எழுத்துக்களைச் சுட்டுவிரல் பகுதியில் தொடர்ந்து தந்து வந்தார் நமது பரிதி பாண்டியன். நிறையபேர் தொலைபேசியில் என்னை அழைத்து "கருக்கல் விடியும்" இதழிலே நாங்கள் முதலில் படிப்பது சுட்டுவிரல் தான். நாங்கள் பேச வேண்டும் என்று நினைக்கிற விஷயத்தைக்கூட பேசிச் செல்கிற துணிவுடைமை பரிதி பாண்டியனுக்கு உரிய தனித்துவம்" என்று கூறுவார்கள்.

நானும் அவரும் முதன்முதலில் பெ. மணியரசன் அவர்களை விரிவான முறையில் ஒரு நேர்காணல் செய்தோம். அடுத்தடுத்து ஆயிஷா நடராசன், கொளத்தூர் மணி, சி. மகேந்திரன் என்று பலரையும் நேர்காணல் செய்தோம், நான் பாதி, அவர் பாதி என கேள்விகளைத் தயாரித்து எடுத்துச் செல்வோம். நேர்காணல்



செய்வோர் சொல்கிற விஷயங்களுக்கு ஏற்ப துணைக் கேள்விகளையும் அவ்வப் போது எழுப்பி, முழுமையான நேர்காணல்களை வாசகர்களுக்குத் தொடர்ந்து வழங்கி வந்தோம். நேர்காணல்கள் எப்படி எடுக்க வேண்டும் என்பதை எங்கள் ஆசிரியர் குழுவில் இருந்த மீனா சுந்தர், மணி கணேசன், கலை பாரதி, செழியரசு போன்றோரை அழைத்துச் சென்று பயிற்சி போல வழங்கியது மறக்கமுடியாதது.: அவர்களையும் இதில் ஈடுபடுத்த வேண்டும் என்ற கருத்தை பரிதி பாண்டியன் அடிக்கடி சொல்லி வருவார்.

பரிதி பாண்டியனுக்கு முழுமையான திருப்தி தந்தது இரண்டு நேர்காணல்கள். பெ. மணியரசன் மற்றும் கல்வியாளர் ஆயிசா நடராசன் இருவரின் நேர்காணல்களும் கருக்கல் விடியும் இதழில் முத்திரையாக அமைந்துவிட்டது என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருப்பார்.

இளந்திரையன் என்ற பெயரில் கவிதைகளை வழங்கியவர் பரிதிபாண்டியன் என்பது ரொம்பப் பேருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. யார் இந்த இளந்திரையன் என்று கருக்கல் விடியும் ஆசிரியர் குழுவிலேயே பேசிக்கொள்வது உண்டு. ஆனால் கடைசிவரை அந்த உண்மையை நான் யாரிடமும் சொன்னது கிடையாது.

நான் வசிக்கும் மன்னார்குடி அசேஷம்

பள்ளிக்குத் தலைமை ஆசிரியராக இருந்தார். கொஞ்ச காலம் என் வீட்டுக்கு எதிரில் தான் பள்ளி. சிறு பிராயத்தில் இருந்தே நானும் அவரும் நண்பர்கள். இடையில் கொஞ் சகாலம் தொடர்பற்று இருந்தோம். அசேஷம் பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தபோது நீண்ட நாட்களுக்குப் பிறகு என்னைச் சந்திக்க வீட்டிற்கு வந்திருந்தார். “உங்களிடம் ஓர் உதவி வேண்டும்” என்று கேட்டார். “சொல்லுங்கள்” என்றேன். ‘‘பள்ளிப் பிள்ளைகள் தரையில் தான் உட்காருகிறார்கள். மழைக்காலத்தில் மிகவும் சிரமமாக இருக்கிறது. அவர்கள் உட்கார மரப் பெஞ்சுகள் சில செய்து தந்து உதவ இயலுமா?” என்றார் தயங்கியபடி. முடிந்ததைச் செய்தேன். அவருக்குப் படிக்கும் பிள்ளைகள் மேல், பள்ளியின் மேல் அந்த அளவு அக்கறை, நேசம்.

அவர் பணியாற்றிய பள்ளியில் ஒரு சிறுமி பள்ளிக்கு வந்ததும், தண்ணீரை முகந்து அடிக்கடி குடித்துக் கொண்டே இருந்திருக்கிறார். ”என்னமா அவ்வளவு தாகமா?” என்று கேட்டிருக்கிறார் பரிதி. அதற்கு அந்தச் சிறுமி ”இல்ல சார்... காலையில் தினமும் சாப்பிடறதில்லை. ஸ்கூலுக்கு வந்ததும் வயிறு பசிக்கும். அந்த நேரங்களில் தண்ணீரை மொண்டு குடித்துப் பசியைத் தீர்த்துக் கொள்வேன்” என்று சொல்ல, கண்கள் கலங்கி விட்டார் பரிதி. அந்தச் சிறுமியை அழைத்து, தான் மதிய உணவுக்கு எடுத்து வந்த சாப்பாட்டைக் கொடுத்துச் சாப்பிட வைத்திருக்கிறார். இது கொஞ்சநாள் தொடர்ந்தும் இருக்கிறது. அதைப் பற்றி என்னிடம் சொல்லும்போது ”பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்குவது முக்கியம்... அதேபோல காலை உணவு வழங்கினால் மிகவும் நன்றாக இருக்கும். அதை அரசு செய்ய வேண்டும். ஏனென்றால் பள்ளிகளுக்கு வரும் பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடாமல் தான் வருகிறார்கள். அந்த அளவுக்கு வறுமைக்கு ஆட்பட்டு இருக்கிறார்கள் அவர்கள்” என்று கூறுவார். இப்போது தமிழக அரசு குழந்தைகளுக்குக் காலை உணவு வழங்குவது பற்றி பரிசீலனை செய்து வருவதாக அறிகிறேன். இதைத் தமிழக அரசு செய்தால், முதல் ஆளாகக் மகிழ்ந்திருக்கக் கூடிய நபராக பரிதி பாண்டியனே இருந்திருப்பார்.



அரசுப்பள்ளிகள் பற்றி இன்று நான் முழு ஈடுபாட்டோடு பதிவுகளைப் போட அவரே காரணம். ”அரசுப் பள்ளியில் தான் என் இரு பிள்ளைகளையும் படிக்க வைத்தேன்” என்பார். பெருமிதம் பொங்க. சொல் ஒன்று செயல் ஒன்றாக இருக்கக் கூடியவர்கள் நிறைந்த இந்தச் சமூகத்தில், முன்மாதிரியாக விளங்க வேண்டும் என்று தன் பிள்ளைகளை அரசு பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்து, இன்று நல்ல நிலைக்கு அவர்களைக் கொண்டு வந்தது அவரால் மட்டுமே முடிந்து இருக்கக் கூடிய ஒன்று.

அரசுப் பள்ளிகள் பற்றியும் அதனை மேம்படுத்த வேண்டியது குறித்தும் அவர் என்னிடம் பேசாத நாளில்லை. ஒன்று இலக்கியம் பற்றிப் பேசுவார் அல்லது அரசுப் பள்ளிகளை மேம்படுத்துவது எப்படி என்பது பற்றி பேசுவார். இரண்டுமே இரண்டு கண்களாய் இருந்தது அவருக்கு. சமச்சீர் கல்வியின் அவசியம் குறித்து, பொன்னீலன், சி. மகேந்திரனை அழைத்து மன்னார்குடி பந்தலடியில் பொதுக்கூட்டம் போடவும், ஆயிஷா நடராசன் அவர்களை அழைத்து கல்வி குறித்தான கலந்துரையாடல் கூட்டம் ஒன்றினை மன்னார்குடியில் நடத்தவும் அவரே காரணம். எனக்கும் உந்து சக்தி அவரே.

சிறு குழந்தைகள் மேல் இருந்த ஈடுபாட்டால் ”கண்ணாமூச்சி ரே ரே” என்ற சிறுவர் இதழ் கொண்டு வந்தார். அதில், என் மனைவி

அனுசுயாவை அந்தக்காலத்திய நினைவுகளை எழுத வைத்தார். அவரைத் தொடர்ந்து, ”உங்கள் அனுபவங்களை எழுதி முடியுங்கள்” என்று தூண்டிக் கொண்டே இருந்தார். இதன் காரணமாக என் மனைவி தன் வரலாற்றை முழுமையாக எழுதி முடித்துவிட்டார். அச்சுக்குப் போயிருக்கிறது. அந்தப் புத்தகத்தைப் பரிதிக்குத்தான் சமர்ப்பணம் செய்து இருக்கிறார் அவர். ”செல்லம்மாள் பேத்தி” என்ற பெயரில் அந்த நூல் வெகு விரைவில் வெளிவர இருக்கிறது.

நம்பமாட்டீர்கள்... பரிதி என்னைப் பார்க்க வர வேண்டும் என்பதற்காகவே இருசக்கர வாகனம் ”ஸ்கூட்டி” வாங்கினார். பெரும்பாலும் ஒரு நாள் விட்டு ஒரு நாள் எங்கள் சந்திப்பு இருக்கும். ”இலக்கியம் போர்னோவாகிப் போய் விட்டது. பழைய சரோஜாதேவி புத்தகம் எழுதியவன் எல்லாம் இன்று இலக்கியவாதி அந்தஸ்தில் அலைகிறான்” என்பார்... அதைக் கடுமையான விமர்சனங்களோடு, ”கருக்கல் விடியும்” இதழில் தரவுகளோடு எழுதவும் செய்தார். புரியாத கவிதை(?) களையும், எதற்கெடுத்தாலும் மேலைநாட்டு எழுத்தாளர்களைக் கொண்டாடுவதையும் நக்கலும் நையாண்டியுமாக விமர்சனம் செய்தார்.

கவிதைகளின் பொற்காலம் என்று வர்ணிக்கப்படுகிற ”வானம்பாடி” காலத்திலேயே ”எழுச்சி” என்ற பெயரில் நண்பர் செல்வக்குமாரோடு சேர்ந்து மன்னார்குடியில் கவிதை ஏடு ஒன்றை சிலகாலம் நடத்தினார் பரிதி. அப்போது நான் ”நர்மதா” என்ற பெயரில் தனியாக ஒரு இதழ் நடத்தி வந்தேன். சேலம் தமிழ்நாடன் ”எழுச்சி” இதழில் கட்டுரை எழுதி இருக்கிறார். உயிரோடு இருந்தபோது, சேலம் தமிழ்நாடன் ”கருக்கல் விடியும்” இதழைப் பார்த்து விட்டுத் தொடர்பு கொண்டு, பழைய நினைவுகளைப் பரிதியிடமும், என்னிடமும் பகிர்ந்து கொண்டார்.

நான் அவர் மற்றும் வே. அமரநாதன், காலம்சென்ற பால கிருஷ்ணமூர்த்தி, அருட்செல்வம் உள்ளிட்ட நண்பர்கள் 1970களில் எங்கள் பகுதி தெருக்களில் முழுநிலவு அன்று கவியரங்கம், கருத்தரங்கம் என்று தொடர்ந்து நடத்தி வந்தோம். மேடை முன்பு தான் ஆட்கள் இருக்க மாட்டார்கள்..




வீட்டிலிருந்தபடியே பெரியவர்களும் தாய்மார்களும் குழந்தைகளும் காதுகொடுத்து எங்கள் குரல்களைக் கேட்டுக் கொண்டுதான் இருப்பார்கள். ஆனாலும் நாங்கள் தொடர்ந்து மாதாமாதம் இந்த நிகழ்வை இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடத்தி அப்போதே இலக்கிய சேவை (?) செய்ய ஆரம்பித்து விட்டோம்.

பரிதியைப் பற்றி எழுத எவ்வளவோ இருக்கிறது. காலம் தந்த மகத்தான இலக்கியன் அவர். படிப்பதும் எழுதுவதும் அவர் சுவாசமாகவே கடைசி வரை இருந்து வந்தது.

நானும் என் மனைவியும் அவரை நினைவுகூறா நாளில்லை. வீட்டிற்கு அவர் அடிக்கடி வருவதும் தேநீர் அருந்தியபடி அளவளாவிய பொழுதுகளும் எங்களின் காலை தேநீர் அருந்தும் போது ஒவ்வொரு நாளிலும் மறக்கவொண்ணா நினைவுகளை, அவர் பற்றிய சிந்தனைகளைத் தந்து கொண்டே இருக்கிறது...

”அண்ணன்” என்று என் மனைவியும், ”பரிதி” என்று நானும் அழைத்துப் பேசி மகிழ்ந்த அந்தச் சொற்கள், இன்றும் எங்களிடையே இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதைக் கேட்டுப் பேச அவர்தான் இல்லை..!

*(கவிஞர் ப.பரிதிபாண்டியன் நினைவு நாள் 22.01.2022)*

உவத்தல்

## புறநானூறு - தமிழர் வேர்களைத் தேடி...

- இலரா மோகன்

கரை ததும்பி
நுரை எழும்பும் குளம்...

கரியமலையொன்று
கிடந்து புரண்டாற்போல்
களிக்கிறது நீராடி
களிறொன்று சேறாடி...

மல்லாந்து படுத்து
முறக்காதை அடித்து
உலக்கைக் கால்களால்
உதைத்து... உதைத்து...
மலைவீழ் அருவி
கீழ்ப்பாய்ந்தாற் போல்
தும்பிக்கை நீரை
தூரப்பாய்ச்சி...

சமரிலே பகையை
சாய்த்துக் கிழித்த
செங்குருதி படிந்து
சிவந்த தந்தங்கள்
கறை நீங்க குளம் நடுங்க
முழுகி... முழுகி... எழ...

எழும்பும் அலைகளால்
இடிந்திடு வோமென
குழம்பித் தவித்தன
குளத்துக் கரைகள்..

அங்கே...
ஓடி வருகிறார்கள்
ஊர்ச் சிறுவர்கள்...
பயம் ஒன்றறியா
பசும் பாலகர்கள்...

பார்த்தார்கள் களிறை
பாய்ந்தார்கள் நீரில்...

மத்தகத்தின்
மேல் ஒருவன்...

குத்திக் கிழிக்கும்
கோட்டுத் தந்தத்தில்
குந்தி யாடித்
தொங்கும் இருவர்
திரளும் முதுகில்
கற்றூண் கால்களைப்
பற்றினர் நால்வர்...

கண்டது வேழம்
கொண்டது நேசம்...

போர்க்களப் பகையை
ஏர்க்களச் சேறாய்
நசுக்கித் துவைக்கும்
நான்கு கால்கள்...

கட்டுண்டு கிடந்தன
பொடியரின் அணைப்பில்...

உடற்று எதிர்வந்த
உன்மத்தப் பகைவரை
சுழற்றி அடிக்கும்
தும்பிக்கை இங்கே

பின்னிக் கிடந்தது
பிள்ளை களோடு...

பகை அரசர்தம்
பரந்த மார்பினை
பாய்ந்து பிளக்கும்
தந்தங்கள் இரண்டும்

ஊஞ்சல்கள் ஆயின
ஊர்ச் சிறுவருக்கு...

போர்க்களத்தில்
பொங்கி எழும்
பெருங் களிறோ
படிந்து கிடந்தது
பால்மணம் மாறா
பாலகர் களிடம்...

செஞ்சோலைப் பிள்ளையெனில்
கொஞ்சி விளையாடும்
வஞ்சமிகு பகையெனிலோ
நெஞ்சம் பிளந்தாடும் ...

அதியமான் நெடுமானஞ்சியே
அந்த வேழம்தான் நீ...
பாடி வந்த பாவலருக்கு
நீ இனியை...
சாடி வரும் பகைவருக்கோ
நீ இன்னாய்...

நீரும் நெருப்பும்
விருப்பும் வெறுப்பும்
உறவும் பகையும்
உற்ற இடத்தில்
வெளி இருப்பவனே
வீரத் தமிழன்...

இனத்தின் குணத்தை
ஏந்திடும் தலைவன்...

புகல்வது புறநானூறு

பைந்தமிழர் விழுமியக்கூறு...
"ஊர்க் குறுமாக்கள்
வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும்
பெருங்களிறு போல
இனியைப் பெரும எமக்கே
மற்று அதன்
துன் அருங்
கடாஅம் போல
இன்னாய் பெரும
நின் ஒன்னாதோர்க்கே!"

**புலவர்: ஔவையார்**
**மன்னன்; அதியமான் நெடுமான் அஞ்சி**
– புறநானூறு 94

கவிதை

# வயோதிக விருட்சம்

செழியரசு



நீங்கள்
அழுக்குப் படுத்திய
உயிர் வளியை
சலவை செய்வதிலேயே
கழிந்ததென் ஆயுள்.

நெடுநாள்
என் நிழல் மடியில்
உமது இளைப்பாறல்கள்..!

கனியமுதூட்டி
உம் பசியாற்றலில்
பெருமை பொங்கும்
எனக்கு.

உறவுப் பறவைகள்
என் கரங்களில்
கட்டிய கூடுகளால்
புளங்காகிதம் கொள்வேன்

என் வேர்நாக்குகள் இற்று
இலைகளுதிர்ந்து
ஆட்டம் காணும் நிலையில்

போகிற போக்கில்
சொல்கிறார் என்னை
மொட்டை மரமென!

சிறுகதை

# குமரேசன் சொன்ன கதை

த.ரெ. தமிழ்மணி

“கபடி... கபடி... கபடி...”

குமரேசன் உதடுகளிலிருந்து சொற்கள் மூச்சாய் வெளிப்பட்டது. உடம்பு முழுக்க செம்மண். முதுகுப்புறத்தில் அச்சிடப்பட்ட ஏழுபுலி மண்தீற்றலில் ஆங்காங்கே நைந்திருந்த்து.

“டேய்... அவன ஏறவுடு, சமயம் பார்த்து முட்டிகேட்ச் போட்டுடுறேன். மேல வுழுந்து அம்மிடு–” கிசுகிசுத்தான் மாறன்.

‘‘இப்படியே சொல்லிட்டுரு ஆனா கோட்டை விட்டுரு. இது மானப் பிரச்சனை புரியுதா?” கோத்த கைப்படி இறுக்கியது.

இவன் ஏறஏற எதிர்ப்பக்கம் இறங்குவது கரையில் அலை அடிப்பது போல் இருந்தது. புழுதி கண்களை மறைத்தது.

‘‘இந்தத் தடவை கடவூர்டீம் மண்ண கவ்விடும் போலிருக்கு”

“போற இடமெல்லாம் கப் அடிச்சிடுமே... கொஞ்சம் பொறு பார்க்கலாம்”



பார்வையாளரின் குரல் உசுப்பேற்றியது. சாமி வந்தவன் போல் பாய்ந்து மாறனைத் தொட்டுவிட்டு அதே வேகத்தில் திரும்பியவனை இடுப்பைக் கோர்த்து அம்மினார்கள், ’தோத்தாலும் பரவாயில்லைனு’ சில நகங்கள் குமரேசனைப் பிறாண்டின. ஆயினும் அவன் மூச்சைவிடவில்லை. “கபடி கபடி” என்றவாறே கைகளை நீட்டி ஒருவழியாகக் கோட்டைத் தொட்டான். சீட்டி சத்தம் காதைக் கிழித்தது. நடுவர் நான்கு விரல்களை உயர்த்திக்காட்டினார். கூட்டம் விரைப்பானது; இருக்காதா பின்னே?

“இது கடைசி ரைடு. இருபதாயிரத்தை தட்ட போறது ரெயின் போவா? ஏழுபுலியா?” ன்னு இன்னுங் கொஞ்ச நேரத்துல தெரியப்போவுது” ஒலி பெருக்கியில் குரல் கரகரத்தது.

குமரேசன் மீண்டு போய்ச் சேர்வதற்குள் காதருகே எதிரணியின் ’கபடி கபடி’ குரல் கேட்டது. ஓடிப்போய் தன் அணியோடு இணைந்து கொண்டான்.

நெற்றியில் ஆட்காட்டி விரலை வைத்துச் சுண்டினான். அது சிவப்பாய்த் தெரிந்தது. ‘என்னடா நெத்தியில் எரியுதுன்னு நெனச்சா... நகத்தால் கீறி இருக்கானுவோ. இது என்ன பெரிய வலி?’

கவனம் ஆட்டத்தில் ஒன்ற மறுத்தது.

இரணியன் தலைமையாசிரியர் முன் கைக்கட்டி நின்றான்; கூடவே குமரேசன் அடக்கத்தோடு. ”தம்பி நல்லா கபடி விளையாடுவாஞ்சார். அரசுப் பள்ளியாய் இருக்கணும்; அதே நேரத்துல அவன் தெறமைய வளர்த்து வுடனும்; அதனாலதான் 40 கிலோமீட்டர் தாண்டி இங்க கொண்டாந்து சேர்த்திருக்கேன்”

‘‘கவலைப் படாம போய்ட்டு வாங்க... எல்லாம் நம்ம பியிட்டி பார்த்துப் பாரு”

கையெடுத்துக் கும்பிட்டான். கண்கள் பனித்தன. ”தம்பி ஊரு சுத்தாம நல்ல பேரு

எடுக்கணும்" லீவுன்னா போன் பண்ணு. நான் வந்து கூட்டிட்டுப் போறேன் குமரேசனிடம் சொன்னவன். தலைமையாசிரியரைப் பார்த்துக் கும்பிட்டுப் புறப்பட்டான். வெள்ளிக்கிழமை 5 மணி எதிர்பார்த்தது போல் குமரேசன் பேசினான்.

''ஹலோ... அண்ணன்... நல்லா இருக்கீங்களா? அண்ணி எப்படி இருக்காங்க?

"எல்லாம் நல்லாருக்காங்க. அங்க ஒன்னும் பிரச்சனை இல்லையே... அழக்க வரவா? "

''வேண்டாண்ணன் கோச்சிங் இருக்கு. ஞாயிற்றுக் கிழமை வெளிடீம்மோட போதுறோம். அங்க மழை பேயிதா? சாப்பாட்டு மணி வரைக்கும் இங்கே பிச்சி எடுத்துட்டு"

''ஆமாண்டா நிக்காம பேயிது. காலனி வூடு பத்த பத்தயா பேத்துகிட்டு வுழுவுது.



அங்க படுக்க முடியாதுண்ணுட்டு புள்ளகொட்டாவுக்கு கீத்து சொருவுனன். அதனாலதான் சீக்கிரமா கௌம்பல. இப்ப கௌம்பிடுவன்; அண்ணியும் வரன்னா. ஒரு எட்டு வந்து பார்த்துட்டு வந்துடுறேன்"

"வேண்டாம் வேண்டாம். அடுத்த வாரம் பாத்துக்கலாம். இப்பவே நேரமாயிட்டு. நான் வெளயாடப்போவணும்.

"டக்கென்று இணைப்பைத் துண்டித்தான். இன்னும் கொஞ்சநேரம் பேசினால் வேலைய அப்படியே போட்டுட்டு வந்துடும். வீட்டின் நிலைமை எண்ணிக் கலங்கினான். ஐப்பசி அடை மழை வைகாசிலேயே பெய்தால் எப்படி இருக்கும்? நல்ல வேலை திடல் உணந்திருந்தது. குமரேசன் ஆவலாய் ஓடினான்.

அடுத்த அடுத்த வாரங்கள் சொல்லிக்கொள்ளும்படி இல்லை. புறப்பட்டு ஊருக்கு வந்து விட்டான். வந்தவனிடம் யாரும் எதுவும் கேட்கவில்லை.

"குளிச்சிட்டு வா சாப்பிடலாம்" என்றான் இரணியன்

குளித்தான்; சாப்பிட்டான்

''பள்ளிக்கூடத்தில? என்ன நடக்குது?'' மெதுவாகக் கெட்டான் இரணியன்.

''சாதிபாக்குறாங்கண்ணே" கண்கள் கலங்கின.

''வெளயாட்டுக்குக் கூட சாதிபாக்கக் கூடாதுன்னு நெனக்கிறோம். வெளையாட்டுலேயும் சாதியா? கடசி வரைக்கும் நாம இப்படியேதான் இருக்கணுமா? நான் வேணும்னா கெச்சம்கிட்ட பேசி பாக்கட்டுமா?"

''வேண்டாண்ணே? அங்கே கெச்சம்மெல்லாம் சும்மாதான் கடவூரு முழுசும் சாதி வெறி புடுச்சு ஆடுது. என்னோட படிக்கிறவுணுவோ எவ்வளவு மெடல்ச்சிருக்காணுவோ எனக்கு ஒரு சர்டிபிகேட் கூட கிடையாது. என்னைய போட்டில கலந்துக்க வுட்டாதானே?" ஆத்திரம் பொங்க பேசும் தம்பியைக் கட்டிப்பிடித்து அழுதுதான்.

''அழுவாதண்ணே... நாம வாழ்ந்துகாட்டணும். ரெண்டு வருசம் பல்லக் கடிச்சுட்டு முடிச்சுட்டு வந்துர்றேன். நல்ல

காலேஜ்ல சேர்ந்து ஜெயிச்சு காட்டுறேன்” அண்ணனைத் தேற்றினான்.

இரண்டு ஆண்டுகள் வெறுமையாய்க் கடந்தன. பள்ளியை விட்டு வெளி வந்த சூட்டோடு சூடாய் விண்ணப்பித்து விளையாட்டுப் பல்கலைக் கழகமொன்றில் தேர்வாகி இருந்தபோதுதான் வைப்பூர் கபடிப்போட்டி விளம்பரம் கண்ணில் பட்டது. போட்டியைப் பார்க்கத்தான் போனான். கடவூர் அணி வந்திருப்பதைப் பார்த்ததும் மண்டைக்குள் சுர்ரென்றது. களம் இறங்கி விட்டான்.

“கபடி கபடி கபடி” உயிர்ப்பொலிகேட்டு விழிப்புக்கு வந்தான். தன்னைத் தொட நீளும் கையை ஒரேலாவு; மணிக்கட்டை எட்டிப் பிடித்தான். தன்னை நோக்கி ஒரே இழு. மேலே வந்து விழுந்தவனின் இடுப்பைக் கோத்து பிடித்தான் குமரேசன்.

‘‘கபடி கபடி எனக் கத்திக்கொண்டே விரால் மாதிரி துள்ளியவனை இரும்புப் பிடியாய்ப் பிடித்துக் கொண்டான். நடுவர் ஒற்றை விரலை உயர்த்திக் காட்டிய பிறகுக் குமரேசன் தன் பிடியை நெகிழவிட்டான். உருவிக்கொண்டு பாய்ந்த எதிரணி இளைஞன் பொத்தென்று மண்ணில் விழுந்தான்.

‘‘கடும் போட்டிக்கு நடுவே வேலங்குடி கோப்பையை தட்டிச் செல்கிறது. வெற்றிபெற்ற ஏழுபுலி டீமுக்கு வாழ்த்துகள். இதில் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கும் குமரேசனுக்கு வாழ்த்துகள். வெற்றியாளர்கள் காத்திருந்து பரிசினைப் பெற்றுச் செல்லவும்” அறிவிப்பு வந்ததுதான் தாமதம். பலத்த ஆரவாரத்திற்கு நடுவே குமரேசனை மேடை நோக்கி தூக்கிச் சென்றனர். இவனுக்குப் பரிசு அறிவித்தவுடன் ஒலிவாங்கி அருகே சென்றான்.

“இதை எங்கண்ணன் இரணியன் கையில் வாங்க விரும்புகிறேன்... ஏன்னா... இப்படி ஒரு பரிசை நான் வாங்க மாட்டேனான்னு பல வருசமா காத்துக்கிடந்தவரு அவருத்தான்” எட்டி நின்று கொண்டிருந்த இரணியன் ஓட்டமும் நடையுமாக வந்து மேடைக்குத் தாவினான். ஏற்பாட்டாளர் அந்த சான்றிதழை வாங்கிக் கொடுக்கும் போது கைகள் நடுங்கின. கண்கள் தழும்பின. குமரேசன் பரிசுத்தொகையை மறுத்துத் தொடர்ந்தான்.

‘‘இந்த ஆட்ட நாயகன் பரிசையும் என்னோட டீமுக்கு கொடுத்துடுங்க. எனக்கு பணம் வேணாம். நான் எதிர்த்து விளையாடிய கடவூர்டீம் என்னோட ஒண்ணா படிச்சவங்க. ஆனா ஒருநாள் கூட போட்டிக்கு அழச்சிட்டு போனதில்ல காரணம் சாதி. இவுங்க மட்டும் அதுக்கு துணை இல்லை. கோச், பியிட்டி, உள்ளூர் அரசியல்வாதி எல்லோரும்தான். சாதி வெறிபுடிச்ச இவங்கள தோற்கடிக்கிறது எப்ப எப்படிதான்னு தெரியல” இறங்கி வீடு நோக்கி நடந்தான். கடவூர் அணி கரைச்சல் பண்ண மேடை ஏறிக் கொண்டிருந்தது.

**கவிதை**

# நிலவழகி



*நினைவு தெரிந்த நாள் முதல்*
*பார்க்க பார்க்க திகட்டாத அழகி*
*எத்தனை கவலைகள் இருந்தாலும்*
*உன்னைக் கடந்து கலைந்து போகும்*
*மேகங்கள் பார்க்கும்போது அதனை*
*போன்றே கனமில்லாமல் லேசாகி*
*விடுகின்றது மனதும்*
*நீ பிரகாசிப்பது போல நானும் பிரகாசமாய்*
*உணர்கிறேன்.*
*இசையை போன்ற தென்றலோடு*
*தனிமையில் உன்னை இரசிப்பதில்*
*ஓர் அலாதிப் பிரியம்...*
*ஆசை... திருப்தி...*
*எல்லாமும்!*

**– ஜெ.ரூபிகா**

கவிதை

# என் பெயர்

- சா. தமிழ்ச்செல்வன்

அவ்வப்போது
புரிந்தும் புரியாததுமாகப்
பேசினேன்...
தத்துவம் என்றார்கள்.

அதையே பின்னர்
பிந்தியதை முந்தியதுமாக
முந்தியதைப் பிந்தியதுமாக
வார்த்தைகளை அடுக்கி
எழுதினேன்...
கவிதை என்றார்கள்.

விவசாயிகளின் களம்
வயலாக இல்லாமல்
பஞ்சாப்பும், உத்தரபிரதேசமும்
டெல்லி நோக்கி நீளும்
நெடுஞ்சாலையுமாகிப்
போனதேன் என்றேன்...
அரசியல் என்றார்கள்.

அவ்வப்போது அன்னபூரணிகள்
அருள்வாக்கு தந்தாலும்
ஏமாறுவது யார் எனக் கேட்டால்
ஆன்மீகம் என்றார்கள்.

நாடு உனதா, எனதா, நமதா
உண்மை தெரிந்தால் சொல்லுங்கள்
என்றால் உளறல் என்றார்கள்

எரியிட்டு எரிப்பதைவிட
வரியிட்டு வாட்டுவதும்
கொழுத்தவர்களுக்குக் குடை பிடித்து
வறியவரை வதைப்பதும்
வாடிக்கையாகி விட்டதே
என்றேன்..
நீ ‘ஆன்ட்டி இந்தியன்’ என்றார்கள்

ஆண்டு ஒன்று ஆனாலும்
உயிர் 720 போனாலும்
கூட்டத்தின் ஊடாக
வாகனமேற்றி கொன்றாலும்
அண்ணலின் வழியில்
அகிம்சை பாதையில்
கொள்கை வெல்லும்
மனிதன் என் பெயர்
என்பேன் நான்!



# நடுநடுங்கும் கிழமைகள்



பூட்டப்பட்ட தேநீர்க்கடை வாசல்களில்
பிஸ்கெட் போடும் கரங்களைத் தேடிய
தெருநாய்கள்
வெறிச்சோடிய சாலைகளில்
பசித்தலைகின்றன.

பனிக்காலம் என்பதால்
சற்றுத் தாமதமாகக் கண்விழித்த சூரியன்
வெறுமை அலையும் வீதிகளை
விநோதமாகப் பார்க்கிறது.

ஒருநாள் முன்பாகவே
அறுக்கப்பட்ட கோழிகளுக்கு
சனிக்கிழமையே வந்துவிடுகிறது
ஞாயிற்றுக்கிழமை.

ஞாயிற்றுக்கிழமை போலவேயில்லாத
ஞாயிற்றுக்கிழமை
தான் ஞாயிற்றுக்கிழமையாயிருப்பதற்காக
குற்றவுணர்ச்சி கொள்கிறது.

ஜனநாயகம் போலவேயில்லாத
ஜனநாயகம்
குற்றவுணர்ச்சி கொஞ்சமும் இல்லாமல்
ஒரு ஞாயிற்றுக்கிழமையின் கழுத்தை அரிந்து வீசுகிறது
துடிதுடிக்கும் ஞாயிற்றுக்கிழமையின் ரத்தம்
பிற ஆறு கிழமைகள்மீதும் தெறிக்கிறபோது
எமக்கொன்றுமில்லை என்பதுபோல
அவசரம் அவசரமாகத் தானியம் கொறித்த மற்ற கிழமைகள்.

தாமும் விரைவில் கொல்லப்படுவோம்
என உணரும்போது
அச்சத்தில்
நடுநடுங்குகின்றன!

– கோ.கலியமூர்த்தி

**கண்ணாமூச்சிக்கு வாசகர்களின் கருத்துகள் வரவேற்கப்படுகின்றன.**

அபுனைவு

# இது இளவேனிலின் காதல்

**கலைபாரதி**

**கா**லந்தோறும் காதல் ஒன்றுதான் ஓய்ந்து போகாத ஒன்றாக இருந்து வருகிறது. உள்ளுக்குள் உயிர்த்திருக்கும் காதலனுக்குச் சுடுமென்று சூடான பானத்தைப் பருக மறுக்கிறாள், வள்ளுவரின் களவுத் தலைவி ஒருத்தி. மானுடப் பிறப்பில் தலைவியின் கால்விரல் நகமாய் இருப்பதே சிறப்பு என்கிறான். வைரமுத்துவின் காதல் தலைவன் ஒருவன், இரண்டாம் நூற்றாண்டிலும் இருபதாம் நூற்றாண்டிலும் ஏன் இன்னும் இன்னும் பல நூற்றாண்டுகள் கடந்தும் படைப்பாளர்களின் தீர்ந்து போகாத பாடுபொருள் காதல் ஒன்றுதான்.

நிழல் பின்னிக் கிடக்கும் வேப்பமரத்து வீதிகளில் கால்கடுக்க கதையளந்த பொழுதுகளில் கால்வலி தெரியாது. காதல்தெரியும். அந்தக் கல்லூரிக்கால இளைய பொழுதுகள் கண்களுக்குள் காதலாய் நிரம்பிக் கசியும். அதிலும், இழந்த காதலே பெரும்பாலும் வாழ்ந்த காதலாகி விடுகிறது. அறியாத வயதும் புரியாத மனதும் பரிமாறிக் கொண்ட மன உணர்வுகள் கனவாய், பெருங்கதையாய் மாறி விடுகிறது.



எதற்காகப் பார்க்கிறார்கள் என்பது தெரியாது... ஆனால், பார்ப்பார்கள். எதற்காகப் பேசுகிறார்கள் என்பது தெரியாது. ஆனால், பேசுவார்கள். எதற்காகப் பிரிந்திருக்கிறார்கள் என்பது தெரியாது... ஆனால், பிரிந்திருப்பார்கள். ஆனாலும் ஜான் மில்ட்டனின் இழந்த சொர்க்கமாய்க் காதல் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கும்.

கடற்கரையோரமாய் அலைந்து திரியும் பரிக்குட்டியின் ஆன்மாவுக்குக் கரை உரசுகிற நுரைததும்பும் அலைகளின் ஊடே கதறுகிற கருத்தம்மாக்களின் காதல் கேட்டுக் கொண்டுதானே இருக்கும். தவிப்பெடுத்து வந்தவனுக்குத் தங்கக் குவளையில் தண்ணீர் தர, குவளை பிடிக்காத தலைவன், கைப்பிடித்து விடுவது கண்டு பெருங்குரலெழுப்புகிறாள், தலைவி ஒருத்தி. ஓடிவந்த அன்னையிடம் நடந்ததை மறைத்து தண்ணீர் குடிக்கும்போது விக்கினான்... அலறினேன் என்று சொன்ன கலித்தொகைக்காரியின் கண்களுக்குள் காதலைக் கண்டு குறுநகை செய்கிறான் நெய்தலக் காதலன்.

அண்மையில் பார்த்த கர்ணன் படத்தில் ஒரு காட்சி. முந்தைய காதலியின் முந்தானையில் இருந்து 10 ரூபாய் பணத்தை அவருக்குத் தெரியாமல் முடிச்சவிழ்த்து எடுத்துச் செல்வார் ஏமராசா. முந்தையக் காதலி.... அந்தப் பெரியம்மாவுக்கு அறுபது வயதிருக்கும்.

பத்து ரூபா போதுமா ராசா? ஒங்களப் பத்தி எனக்குத் தெரியாதா? ஒங்கள விட்டுட்டுப் போகும்போது, என்னைப் பார்த்துக்க அக்கான்னு... சொல்லிப்புட்டுதானே கண்ண மூடினா பண்டாரத்தி.... என்பார். திக்குமுக்காடிய ஏமராசா, அந்தப் பெரியம்மாவை நெருங்கி கிட்ட வந்து துளிர்த்தக் கண்ணீரைத் துடைத்து விட்டு உச்சந்தலையில் முத்தமிட்டுச் செல்வார். அந்த உச்சந்தலை முத்தத்துக்குள் ஒளிந்து

கொண்டிருப்பது காதலியை இழந்து நிற்கின்ற எண்ணற்ற காதலர்களின் வாழ்ந்த காதல்–

”தம்பி... அப்பாபையில பத்து ரூபா எடுத்து பால் வாங்கிட்டு வாடா...”

”அம்மா பர்சுல காசு எடுத்துக்கிட்டேன். ஆனா அதுல ஒரு வெளிநாட்டுப் பணம் செல்லரித்து இருக்குமா?” என்றான் கார்க்கி.

”அதுவா... அதுக்குள்ளாற ஒங்க அப்பாவோட இன்னொரு வாழ்க்கை இருக்குடா– அது என்னன்னு ஒங்க அப்பாவையே கேளு?”

’செல்லரித்தப் பணம் பர்சுக்குள் இருக்கு. பர்சு பாக்கெட்டுல இருக்கு. பாக்கெட்டு இதயத்துக்குப் பக்கத்துல இருக்கு. அவ்வளவு நெனப்பு இன்னும் அவருக்கு...”

”எப்பா... ஏதுப்பா செல்லரித்தப் பணம். என்னப்பா அது?”

”நீ போயி பால் வாங்கிட்டு வா... சொல்றேன்.”

பால் வாங்கப் போகிறான் கார்க்கி நினைவுகளில் தளும்புகிறார் இளவேனில்

அவருடைய கல்லூரிக்கால இளங்கலை படிப்பு அவ்வளவு சரியான பாதையில் சென்றதாகச் சொல்லிவிட முடியாது. கரடு முரடானதுதான். அப்போதைய இராசகோபாலசாமி கல்லூரி என்றால் வாரம் ஒரிரு நாட்கள் கல்லூரி நடக்கும். மற்றைய நாட்கள் ஸ்டிரைக் நடக்கும். எதற்காக ஸ்டிரைக் என்கிற காரணமெல்லாம் கிடையாது. எதற்கெடுத்தாலும் ஸ்டிரைக். தண்ணீர் வரவில்லை, பேருந்து நிறுத்தவில்லை, நகரில் புதுப்படம் ரிலீஸ், என இப்படியானக் காரணங்களும் ஸ்டிரைக்குக்குள் அடக்கம்.

அனைத்துக் கல்லூரியிலும் பேருந்து தினம் கொண்டாடுவார்கள். இங்கு மட்டும் மரதின விழா– மரம் நடு விழா அல்ல. மரத்திற்கு வண்ணத்தாள் ஒட்டி, மரத்தைச் சுற்றி ட்ரம்செட் வைத்து அடித்து ஒரே ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என்று அன்று முழுவதும் அலப்பறையாய் இருக்கும். அதிலும், கல்லூரித் தேர்தல் என்றால் சொல்லவே வேண்டியது இல்லை. எப்போதும் கல்லூரித் தேர்தல் நடக்கும். கூடவே கலவரமும். அதுபோன்ற ஒரு நாளில் ஒரு கத்திக்குத்து



கலவரத்தில் சிக்கி காவல் நிலையம் வரை சென்று சஸ்பெண்ட் செய்யப்பட்டு மீண்டும் கல்லூரி வந்தவரை நல்லாற்றுப்படுத்தியது பேராசிரியர் தங்க. செயராமன் என்பதை எப்போதும் சொல்லிக் கொண்டே இருப்பார்.

”ஒங்களுக்குத் திறமை இருக்கு இளவேனில் உங்களால் முடியும். உங்கள் ஆற்றலைப் படிப்பை நோக்கித் திருப்புனீர்கள் என்றால் உங்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு....”

தோளின்மேல் கைபோட்டு கூடவே நடந்துகொண்டு சொன்ன பேராசிரியர் செயராமனின் வாக்கு. இளவேனிலுக்கு அருள்வாக்காய் மாறிபோனது. கல்லூரி வாழ்க்கை தெளிந்த நீரோடையாகச் சலசலத்து ஓடியது.

இளங்கலை ஆங்கில இலக்கியம் முடித்தவர், முதுநிலைப்படிப்பிற்காகக் கும்பகோணம் கல்லூரியில் சேர்கிறார். அவர் படிக்கின்ற வகுப்பில் ஒரு சந்தனத்தி. உள்ளபடியே அவள் சந்தனத்திதான். வகுப்பில் அனைவரிடமும் பேசுகின்ற இவர் அவளிடம் மட்டும் பேசுவதில்லை. அனைவரிடமும் பேசுகிற அவளும் இவரிடம் மட்டும் பேசுவதில்லை. அதுவும் கொஞ்ச காலம்தான். இருவரும் பேச ஆரம்பித்தபிறகு வகுப்பில் உள்ள யாரிடமும் இவர்கள் பேசுவதில்லை.

பேருந்து நிலையத்திலிருந்து கல்லூரிக்குப் பெரும்பாலும் நடந்து போவதுதான் இளவேனிலின் வழக்கம். கல்லூரிக்கு நேரமாகி விட்டது என்றால் நகரப் பேருந்தில் சென்று

விடுவார். அன்று காலையில் கல்லூரிக்குச் செல்லும்போது பரணிகா தியேட்டரில் 'ரோசாப்பூ ரவிக்கைக்காரி' என்று போஸ்டர் ஒட்டி இருந்தது. போஸ்டரில் ஒரு கூடையைக் கக்கத்தில் வைத்துக்கொண்டு, வெற்றிலைச் சாறு உதட்டில் வடியும் வெள்ளந்திச் சிரிப்போடு சிவகுமார் பக்கத்தில் பார்ப்பவரைச் சுண்டியிழுக்கும் மயக்கும் கண்களோடு தீபா. மன்னார்குடியில் பல முறை இந்தப் படத்தைப் பார்த்திருந்தும், இன்று எப்படியும் பரணிகாவில் இந்தப் படத்தைப் பார்த்துவிட வேண்டும் என்ற எண்ணத்தோடு இளவேனில்.

''பரணிகாவுல ரோசாப்பூ ரவிக்கைக்காரி போட்டிருக்கான் பாட்டெல்லாம் பிச்சி ஒதறி இருக்காங்க. நான் பலமுறை பாட்டு கேட்டிருக்கேன். ஒரு முறை கூடப் படம் பார்த்தில்லை. போலாமா? ''மதியம் என்.ஆர்.சார் க்ளாஸ் அதுவும்ரெண்டு ப்ரீயடு தொடர்ந்து... ப்ளீஸ் போலாமாப்பா...” என்றாள் சந்தனத்தி.



இனவேனிலுக்கு மனசுக்குள் ஆயிரமாயிரம் மின்னல்கள். 'ஓ போகலாமே...' அவருக்கு நண்பர்களோடு படம் பார்க்கச் செல்வதை விட சந்தனத்தியோடு செல்வது மிகவும் பிடிக்கும். படத்தை அக்குவேறு ஆணிவேறாக அலசுவாள் ஒரு தேர்ந்த திறனாய்வாளர் எப்போதும் அவளுக்குள் உண்டு.

''கண்ணதாசன் என்னம்மா எழுதி இருக்காரு அந்தப் பாட்டு?”

“எந்தப்பாட்டு?”

“அதான்.. உச்சி வகுந்தெடுத்துப் பிச்சிப்பூ வச்சக்கிளி—”

“அது... கண்ணதாசன் இல்ல... புலமைப் பித்தன்”

என்கிற சந்தனத்தியை ஆர்வமாய்ப் பார்க்கிறார் இளவேனில். இதற்குத்தான் இவளோடு படம் பார்க்க வேண்டும். மனசு பரபரக்க ஆரம்பித்தது.

”ஆமாம்.. அவரு தமிழசிரியரா இருந்தவரு. அந்தப் பாட்டுல ஒரு விசயத்த நேரடியாய்ச் சொல்லாம சுத்தி வளச்சு சொல்வாரு பாத்தியளா? அதாவது, பச்சைமலை பக்கத்துல பிச்சிப்பூ வச்சக்கிளி மேயுது... அப்படின்னு ஊரரார் சொல்றாங்க. நான் நம்பல. அந்த பாட்டு முழுவதும் அப்படித்தானே போகும்”.

பேசிக்கொண்டே பேருந்து நிறுத்தம் வந்துவிட்டார்கள். மாயவரம் பேருந்தில் சந்தனத்தியை ஏற்றிவிட்டு, இளவேனில் மன்னார்குடி பேருந்துக்காகக் காத்திருந்தார்.

காந்திபார்க் புல்வெளியும், மகாமகக் குளக்கரைப் படிக்கட்டுகளும், சுவாமிமலை முருகன் கோயில் தூண்களும் இவர்களைப் பற்றியே பேச ஆரம்பித்தன. என்ன மாதிரியான உணர்வுகள் அது. வரையறுக்க இவர்களுக்குத் தெரியவில்லை. அப்பா கல்லூரிப் போக்குவரத்துக்காகக் கொடுத்த காசுகள் குடந்தை வாசு திரையரங்கக் டிக்கட்டுகளாக மாறிபோனதும் உண்டு.

”இளவேனில்... இன்னைக்கு ஒங்க பிறந்த நாள், இத வச்சிக்குங்க...”

கொடுத்துவிட்டுச் சென்றபிறகுதான் அது வெளிநாட்டு ரியால் என்பது இவருக்குத் தெரிய வருகிறது.

அந்த ரியால்தான் பர்சுக்குள்ளும், பணியாற்றும் இடங்கள்தோறும் முப்பது ஆண்டுகளாக இப்போதும் இவருடன் பயணித்துக் கொண்டிருக்கிறது.

”ஏங்க... அந்தப் பணத்துக்கு எவ்வளவு மதிப்பு என்று எனக்குத் தெரியும். எங்க எல்லோரையும் விட அந்தப் பணத்துக்கான மதிப்பு எப்போதும் கூடுதலானது என்பதும் தெரியும். அவுங்க எங்கே இருந்தாலும் தேடிக் கண்டுபுடிச்சு, இந்தப் பணத்தை லேமினேஷன் போட்டு ஒரு வாழ்த்துமடலா நாம குடும்பத்தோடபோயி அவுங்கக்கிட்ட கொடுத்துட்டு வந்துடுவோமுங்க...”

மிகுந்தப் புரிதலோடு மனைவியை அன்பு பொங்கப் பார்க்கிறார் இளவேனில்.

## மண்ணின் கதைகள் மக்கள் மொழியில்

# நடவுக்குப் போன அம்மாவும் நமத்துப் போன பக்கடாவும்

**கோ.அருணகிரி**



"**அ**ந்த மனுஷன் வுட்டுட்டுப் போனப் பொறவு புள்ளைங்களக் கரையேத்த வெம்பாடுபட்டா... அவ" கீழத்தஞ்சை, மேலத்தஞ்சை மாவட்டங்களில் பெண்களின் போராட்டமான வாழ்வு குறித்த சொற்பிரயோகம் இது.

அலுமினிய வாளியில் பழைய சோத்தை அள்ளிப் போட்டுக்கிட்டு பொழுது ஒரு பக்கம் விடியறதுக்குள்ள அம்மா, அக்காவெல்லாம் நடவுக்குக் கிளம்புவாங்க. எப்போதாவதுதான் அக்கம் பக்கமா நடவு கிடைக்கும். பெரும்பாலும் எட்டு மைல், பத்து மைல் தள்ளித்தான் வேலையிருக்கும்.: தேவங்குடி, கர்ணாவூர், பாமணி, மூவாநல்லூர், ரெட்டபுளி, சவளக்காரன், காளாஞ்சிமேடு இதெல்லாம் அம்மாவும் அக்காக்களும் நடவுக்காக நடந்தே சென்ற ஊர்கள். அப்போது எங்கள் குடும்பம் கிராமத்தை விட்டு மன்னார்குடிக்கு நகர்ந்து விட்டிருந்தது. நான் இங்கு மன்னார்குடியில் தான் பிறந்தேன்.

ஒவ்வொரு தெருவிலும் வயல் கார முதலாளிக்குத் தெரிந்த ஒரு பெண் இருப்பாள். அவள் மத்தவங்களை விடக் கொஞ்சம் வசதியாக இருப்பாள். என்ன பெரிய வசதி.... எங்க வீட்டில சிம்னி விளக்குன்னா அவ வீட்ல ரண்டு குண்டு பல்பு எரியும். எங்க வீட்ல தினந்தினம் பழையதுதான். அவ வீட்டுல ரண்டுல... மூணுல தோசை இட்லின்னு இருக்கும், எங்க வீட்டுத் தரை மண் தரை. அவ வீடு சிமெண்டுத் தரை,, போனா வந்தா கட்டிக்க நல்ல புடவையா ரெண்டு வச்சிருப்பாங்க. இந்த அளவுக்கான

வசதிதான் அது.

ஏ..... அஞ்சம்மா...ஏ, சின்ன பொண்ணு இன்னிக்கு நடவுக்குப் பத்தாளைக் கூட்டியா, பதினைஞ்சாளைக் கூட்டியான்னு முதலாளிங்க இவங்க கிட்ட தான் பொறுப்பு ஒப்படைப்பாங்க. அதனால நடவு சனங்க இவங்ககிட்ட நயம் பயமா இருந்துக்குவாங்க.

அதிகாலமா நடக்க ஆரம்பிச்சா வேலதலப்புக்குப் போய்ச் சேர ஏழு, எட்டு மணி யாயிடும். நடவு முடிந்து வீடு திரும்ப பொழுதாயிடும். "பொழுதோடத்தான் திரும்புவோம். நீ பள்ளிக்கூடத்தில் இருந்து வந்து ஆட்டுவொல புடிச்சுக் கட்டிட்டு, கோழிய கவுத்துட்டு, பத்திரமா இருந்துக்க'ன்னு சொல்லிட்டுதான் அம்மா கிளம்பும்.

நா.... சாயங்காலமா பள்ளிக்கூடம் விட்டு வீடு வந்து அம்மா சொன்ன மாதிரி ஆடுகளைக் கட்டிவிட்டு, கோழிகளைப் பிடித்துக் கூடையிலே கவுத்துப் போட்டுட்டு, தெருக் கடைசில இருக்குற ரெட்டத் தந்தி மரத்துக்குப் போயிடுவேன். (மின் கம்பங்களைத்தான் நாங்க தந்தி மரம் என்போம்) இரண்டு மின் கம்பிகளின் இடையில் சிமெண்ட் கட்டை கட்டியிருப்பார்கள். நான் அங்கு வசதியா உட்கார்ந்துக்குவேன்,

எந்தப் பகுதிக்குப் போவனுமுன்னாலும் வரனும்னாலும் அதுதான் வழி. கலைஞ் சிப்போன தலையும் சேற்றுடனும் சனங்க பேசிக்கிட்டே வருவாங்க. "எங்க அம்மாவப் பார்த்தீங்களா, அக்காவப் பார்த்தீங்களான்னு நா(ன்) ஒவ்வொருத்தருக்கிட்டேயும் கேட்டுகிட்டே இருப்பேன். "பின்னாடி வர்றாங்கப்பா"ன்னும் "இன்னும் அவங்க கரையேறலடா சின்னப்பயலே" ன்னும் சொல்லுவாங்க. கரையேறலன்னா இன்னும் நடவு முடியலேன்னு அர்த்தம்.

சில நேரம் அம்மாவுக்கு நடக்க முடியாது, "நா குந்தி குந்தி வர்றேன் ஆயா, நீங்க முன்னாடி போய் விளக்குக் கொளுத்திட்டு ஒல வையிங்க"ன்னு அக்காங்கள அனுப்பிவைச்சுட்டு அம்மா பாவம் கால் வலியோட மெதுவா வந்து சேரும்.

அப்போவெல்லாம் சாயங்கால சமையல்தான். என்ன பெரிய சமையல் வாழுது... பெரும்பாலும் பூண்டு, மிளகு



ரசம்தான். என்னைக்காச்சும் முருங்கைக்கீரைக் குழம்பு வைப்பாங்க, அதுக்கு கீரை ஒடிச்சு உருவக் கூடிய அளவுக்கு வெளிச்சம் இருக்கனும். அன்னைக்குத்தான் அது நடக்கும். ரசமா இருந்தா அதுக்கு தொட்டுக்க அடமாங்காதான். (நல்லாத் தேறுன மாங்காயின் இரு கன்னங்களையும் காயுடன் சிறிது ஒட்டி யிருப்பது போல அரிந்து இரண்டு பிளவிலும் அளவான உப்பு வைத்து மண்பானையில் வைத்து சிறிதே நீர் விட்டு, பானையின் வாயை துணியால் கட்டி மூடிவிடுவார்கள். இப்படி மண் பானையின் வாயை துணியால் மூடி கட்டுவதற்கு வேடு கட்டுதல் என்று பெயர். அந்தப் பானையை வெய்யிலில் வைத்து விடுவார்கள். கரைந்த உப்பை உறிஞ்சிய மாங்காய் சில நாட்களில் காய்ந்துவிடும். வருசம் பூரா அதுதான் தொட்டுக்க... தேவாமிர்தம்) கீரைக் குழம்புன்னா கீரைதான் தொட்டுக்க... தொட்டுக்க தொடச்சிக்கங்கிற வாழ்க்கை ஒன்றும் அவலமாக இல்லை என்றாலும் இனிமையாகவும் இல்லை.

மாங்கா வத்தல், கொத்தவர வத்தல், கத்தரி வத்தல் மூன்றையும் போட்டு ஒரு புளிக்குழம்பு வைப்பாங்க. வருசம் முழுக்க இதுதான் குழம்பு. அதுவும் தினம் கிடையாது. ஒரு நாள் வைச்சக் குழம்ப இரண்டு நாள் மூன்று நாள் கூட சூடு பண்ணி சூடு பண்ணி சாப்பிடுவோம். என்னிக்காச்சும் "தெய்வம் சிரிச்சாப்புல" (அரிதாக நடப்பவற்றை அம்மா அப்படிச் சொல்லும்) நடவு முடிஞ்சி வரும் போது

சாப்பாடு கொண்டு போன வாளியிலே சார் முட்டிப் பொடிகளைப் பிடித்துக் கொண்டு வருவார்கள். (வாய்க்காலின் குறுக்கால ஈச்சம் கம்புகளைக் கொண்டு செய்யப்பட்ட தட்டி போன்ற அமைப்பே 'சார்' என்று சொல்லப்படும். இந்த சாரினை முட்டி, மொய்த்துக் கிடக்கும் மீன் குஞ்சுகள்தான் "சார் முட்டிப் பொடி'யாகும்). அன்னைக்குப் பார்த்தா வீடே அமளிதுமளிபடும். ஒரு அக்கா கொண்டுவந்த சார் முட்டிப் பொடிகளைக் கழுவ, ஒரு அக்கா அம்மியில் மிளகா அரைக்க, அம்மா கருவ முள்ளு, ராட்டிகளை வைச்சு அடுப்பைப் புகையவிட்டிருக்க, அப்பாவும் நானும் நிலா வெளிச்சத்தில், வாசலில் பாய் விரித்து, மீன் குழம்பு வாசம் பிடித்துக்கொண்டு ஆர்வமாய் உட்கார்ந்திருப்போம். அன்னைக்குச் சாப்பிட்டுப் படுக்க ராத்திரி பத்து மணியாயிடும்.

எல்லா குழம்பும் தண்ணியாத்தான் இருக்கும். தேங்காய் அரைத்துக் குழம்பு வைப்பது எல்லாம் பெரிய இடத்துல தான். எங்க வீட்டில அஞ்சு காசுக்குப் பத்துக் காசுக்கு தேங்காய்க்கீத்து வாங்கியாந்து குழம்பு வைப்பாங்க. அதுலேயே கொஞ்சம் மிச்சப்படுத்தி அம்மா உப்புப் பானையில் போட்டு வைக்கும்.

நடவுக்குப் போற பொண்களுல பார்வதி அத்தை கொஞ்சம் அரட்டை யாய்ப் பேசும். நடவுப் பாட்டு பாடுன்னா சினிமாப் பாட்டு பாடுமாம். என்ன பார்வதி சாப்பாடு கொண்டு வந்திருக்கேன்னு 'பொண்டுவ' கேட்டா நா ஐஸ் பிரியாணி கொண்டு வந்திருக்கேண்டி'ன்னு அத்தை சொல்லும்மாம். பழைய சோத்தைத்தான் 'ஐஸ்' பிரியாணி அப்படின்னு அத்தை நக்கலடிக்குமாம்.



நடவு வயல்ல மதியத்துக்கு பட்சனமின்னு ஒன்னு தருவாங்க. டீக்கடையில போட்டு வைச்சிருக்கிற வடை, போண்டா, பக்கடா பொட்டலத்தைத்தான் பட்சனமினு சொல்லுவாங்க. பார்வதி அத்தை வயக்கார்ரே, அவன் கடையில் வாங்காதீங்க. டீயக் கழுவ தண்ணி மாதிரியும் போண்டாவ பளிங்கு உருண்ட சைசுலயும் போட்டு வைச்சிருப்பான்" ங்குமாம். இப்படிப் பேசறதினாலேயே "பார்வதிய கூட்டியாரதீங்க" ன்னு வயக்காரங்க சொல்லுவாங்களாம். ஆனா இப்படி அரட்டையாப் பேசுறது களைப்புத் தெரியாம இருக்குதுன்னு நடவுக்குப் போற பொண்டுவ பார்வதி அத்தையைக் கூட்டிக்கிட்டுத்தான் போவாங்க.

ஒருநாள், இருட்டுனத்துக்குப் பிறகும் முழுசா நட்டுட்டுதான் கரையேறனும்னு வயக்காரர் சொல்ல, "இந்தக் குடிக்கிப்பய வயலுக்கு இனி யாரும் வரமாட்டாங்க மேலுக்கு நா வரமாட்டேன்டி"ன்னு அத்தை பச்சையாவே திட்டிப்புட்டாம். 'ஏய், இவள அழைச்சிக்கிட்டுவந்தா நம்ம பொழைப்பு போயிடும்டி'ன்னு சிலர் கத்த, "ஏன்... அவ நாக்கப் புடுங்கிக்கிறாப்புல நல்லாத்தானா கேட்டா"ன்னு சிலர் பதிலுக்குக் கத்த அன்னைக்கு வயக்காட்டுல ஏகத்துக்குச் சண்டையாயிடுச்சாம்.

செவ்வாய்க்கிழமைன்னா அம்மா நடவுக்குப் போவாது, அன்னைக்குதான் மன்னார்குடியில சந்தை கூடும். சந்தைப் பேட்டையும் கடைத்தெருவும் ஜே....ஜேன்னு இருக்கும். சாமன்சட்டு வாங்க சுத்துப்பட்டு கிராமத்து சனங்க ஆடு விற்க மாடு விற்கன்னு கூட்டம் கடுசா இருக்கும். அம்மா பிறந்தது உள்ளிக்கோட்டை, அப்பாவுக்கு ஆலங்கோட்டை, அம்மாயிக்கு கூப்பாயட்ட கூப்பாயச்சிக்கோட்டையைத் தான் அம்மா கூப்பாயட்டன்னு சொல்லும். திருப்பாலக்குடி என்பது ஓர் ஊர்தான். கிழக்கால இருப்பதைக் கீழப்பல்லாக் குடின்னும் மேற்கால இருப்பதை மேலப்பல்லாக்குடின்னும் சொல்லுவாங்க.

உள்ளிக்கோட்டைப் பகுதியில் வீட்டுக்கு ஒரு பேர் உண்டு. (வீடுன்னா பங்காளிகளைக் குறிப்பது) செங்கி வீடு, ஊசி முத்தான் வீடு, குட்டச்சி வீடு, காட்டுப்புலி வீடு, கட்டயன் வீடு, ராக்கையன் வீடு, சீத்தாம் வீடு இப்படி நிறைய பெயர்கள். ஒரே பேர்ல இரண்டு நபர்கள் இருந்தால் வீட்டுப் பெயரையும் சேர்த்து அடையாளப்படுத்துவார்கள்.

இங்குள்ளவர்களுக்கு மன்னார்குடி செவ்வாய் சந்தைதான் கூடுமிடம். சாமான் சட்டு வாங்கறது ஒரு பக்கம் இருந்தாலும் யாராவது சாதிசனம் சொந்தபந்தம் பார்க்கலாமுன்னு அம்மா சந்தைக்குப் போவும். அந்த சனங்களும் 'மன்னாருடி, மன்னாருடின்னு இங்க வருவாங்க. மன்னார்குடி தான் மக்களின் பேச்சுமொழியில் மன்னாருடி.

உள்ளிக்கோட்டை கடைத்தெருன்னா பேட்டைத் தெருதான். முப்பது வருசத்துக்கு முந்தி. அட..... நாற்பது வருசமுன்னு வச்சுக்குவோமே, ஒரு டீ கடை, ஒரு வெத்தலை பாக்கு கடை, ஒரு சினிமா கொட்டாய் இதுதான் கடைத்தெரு. இன்னிக்கு, யப்பா... மன்னார்குடி கடைத்தெருவே தோற்கடித்து விடும் போல ஜே..ஜேன்னு இருக்கு. அப்போபெல்லாம் சாமஞ் சட்டு வாங்க, பொழுது போக்க மன்னார்குடிக்குதான் வரணும்.

சந்தைக்குப் போய் வந்த நாட்களில் அம்மா, அங்கே பார்த்தது கேட்டது என நாள் முச்சூடும் சொல்லிக்கிட்டே இருக்கும். இப்படித்தான் ஒருக்கா கப்பரமூட்டு கண்ணாடி யண்ணன் சந்தையிலே அம்மாவை கண்டுட்டு, என்னம்மா இது.... ஊசி முத்தாமூட்டுல ஒத்தப் பொண்ணா பொறந்திட்டு இப்படி சீரழிவா இருக்கேயம்மான்னு சொல்லிட்டு 'ஒரு கண்ணுக்கு அழுதிட்டாருன்னு அம்மா விம்மலுடன் கூறியது, முட்டை விளக்கின் குறைந்த வெளிச்சத்தில் அம்மா அறியாமல் என் கண்களைத் துடைத்துக் கொண்டேன். இப்படித்தான் என் சொந்தங்கள் பற்றிய அன்பை, அம்மா என்னுள் பதியம் போட்டிருந்தது.

ஊசி முத்தான் வீட்டு சிங்காரவேலு மாமா மன்னார்குடி சந்தையில் விற்க மரவள்ளிக்கிழங்கை மாட்டு வண்டியில் ஏற்றி



வரும். விற்றது போக மீதமுள்ள கிழங்குகளை கொண்டாந்து போடும். மரவள்ளிக் கிழங்கு எங்களுக்கெல்லாம் மிகப் பெரிய தின்பண்டம். அவித்துத் தின்போம். சுட்டும் தின்போம். பள்ளிக்கூடத்துக் கூட்டாளிகளுக்கெல்லாம் 'உள்ளிக்கோட்டை கிழங்குடா'ன்னு ரொம்பவும் பெருமையடித்துக் கொண்டு கொடுப்போம்.

கிழங்கும் முருங்கைக் கீரையும் போட்ட கருவாட்டுக் குழம்புன்னா அப்பாவுக்கு உசுரு. மேலவாசல் கிழங்கும்மா என்னமா இனிக்கும். மாளிகை மேட்டுக் கிழங்கு ஆயி... மாவுஞ் மாவா இருக்கும். இப்படி ஊர் பெருமை சொல்லியே வித்திட்டு விவசாயிங்க ஊர் திரும்புவாங்க. உண்மைதான். மேலவாசல் கிழங்கு, நாகை காய்கறி, மாளிகைமேட்டு கீரை, வடசேரி முருங்கைக்காய் என ஒவ்வொரு ஊர் மண்ணுக்கும் தண்ணீருக்கும் தனிப்பட்ட சுவை உண்டு. அதெல்லாம் மாறிப் போச்சு, மன்னார்குடி சந்தையும் கூட ரொம்ப சுருங்கிப் போச்சு. ஏதோ... பழைய ஞாபக மிச்சத்தில் பிச்சைக்காரர்கள் மட்டும் செவ்வாய்க்கிழமைகளில் கடைத் தெருவை சுற்றி வந்து கொண்டிருக்கிறார்கள்.

நடவு வயல்ல தங்களுக்குத் தரப்பட்ட பக்கடாவை அக்காக்கள் தின்றுவிட, அம்மா பள்ளியொடத்திலேர்ந்து வந்த புள்ள பசியோட கொடி ஆடு கணக்கா நிப்பானேன்னு தனக்குத் தரப்பட்ட பக்கடா பொட்டலத்தை மடியில் கட்டிக் கொண்டு வரும் தூரத்தில் தெரியும் அம்மாவின் உருவத்திற்காக நான் ரெட்டை தந்தி மரத்தின டியில் காத்துக்கிடப்பேன். எனக்குத் தெரியும் என் அம்மா தன் மடியில் நமத்துப் போன பக்கடாவை பத்திரமாய் வைத்திருக்கும் என்று.

படச்சுருள்

# ரைட்டர்

**குதூகலன்**







**ஆ**ங்கிலத்தில் ரைட்டர் என்ற சொல் எழுத்தாளனையும் குறிக்கும் காவல் நிலையத்தில் பணிபுரியும் காவலரையும் குறிக்கும். ஆனால் தமிழில் எழுதுபவனைக் குறித்த எழுத்தாளர் என்ற சொல்லும் காவல்நிலைய காவலரை குறிக்க எழுத்தர் என்ற சொல்லும் பயன்படுத்தப்படுகிறது என்பதே தமிழின் தனிச்சிறப்பு. இதற்கும் இந்தப் படத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை சும்மா சொல்லலாம்னு தோணுச்சு அவ்வளவுதான்.

ரைட்டர் திரைப்படம் ஒரு போலீஸ் கதை தமிழ் சினிமாவில் மூன்று வகையான போலீஸ் கதைகள் உண்டு.

ஒன்று மோசமான போலீஸ் ரொம்ப கெட்டவர், பணக்காரர்களுக்கு சேவை செய்யவே பணி நியமனம் பெற்றவர்.

இரண்டு காமெடி போலீஸ் மக்களிடம் மாமுல் வாங்குபவர். இவர்களை வைத்து வார இதழ்களில் நகைச்சுவைத் துணுக்குகள் எழுவது மாமூல் (வழக்கம்).

நேர்மையானவர், நாட்டுப்பற்றாளர், விரைப்பாக இருப்பவர் அதிலும் நான் போலிஸ் இல்ல பொறுக்கி எனச் சொல்லி எதிரிகளைப் பந்தாடும் வீராதி வீரர் போலீசுகள் மூன்றாவது வகை.

இவற்றில் இருந்து எவ்வகையில் மாறுபட்டுள்ளது ரைட்டர் என்பதுதான் நோக்க வேண்டியுள்ளது.

மோசமான காவல் நிலையத்தில் உள்ள நல்ல போலீஸ் பற்றிய கதை. அட இதுவும் பழசு தான். இது போல எல்லாப் படத்திலும் ஒரு நல்ல போலீஸ் இருப்பாங்களே–

ஆமாம் இருப்பார்கள். ஜெய்பீம் படத்தில் கூட அப்படி ஒரு போலீஸ்காரர் இருப்பார். ஆனால் ஏதேனும் ஒரு காட்சியில் தான் நல்லவர் என உணர்த்தி விட்டு செல்வதும் மட்டும்தான் அவரது வேலை அப்படி இல்லாமல் அந்த நல்ல போலீசின் வாழ்க்கை, பணி நெருக்கடி, அவரது உணர்வுகள் என அத்தனையும் நமக்குக் கடத்த முயல்கிறது ரைட்டர்.

அது என்ன நல்ல போலீஸ்? படத்துல அவருக்கு இரண்டு பொண்டாட்டி. இரவான குடிக்கிறார். அவர் நல்லவரா? என சிலர் கேட்பதுண்டு. இது அவர்கள் குற்றமல்ல. நல்லவன் என்ற ஒரு வரையறையை வைத்து அதற்குள் வாழ்ந்துகொள் என்கிற சமூகத்தின் குற்றம், விமர்சனம் வேற பக்கம் போகுது போல சினிமா விமர்சனத்திற்குத் திரும்புவோம்.

காவலர்களுக்குச் சங்கம் வேண்டும் என சட்டப் போராட்டம் நடத்தும் ஒருவரை 20 ஆண்டுகளாக எழுத்தர் பணியிலேயே

வைத்துவிட்டது நிர்வாகம். அதிலேயே கிடந்து ஊறிப்போன மனிதராக நடித்திருக்கிறார் சமுத்திரக்கனி. இவரது சட்டப் போராட்டத்தை விரும்பாத உயரதிகாரி அவரை சென்னைக்குப் பணி மாறுதல் செய்து விடுகிறார்.




சென்னையில் துணை கமிஷனராக இருக்கும் அதிகாரி ஓர் இளைஞனை கல்யாண மண்டபத்தில் அடைத்து வைத்திருக்கிறார். அவரைப் பாதுகாக்கும் பணி சமுத்திரகனிக்குக் கொடுக்கப்படுகிறது.

அந்த இளைஞன் தேவகுமாரன் (ஹரி மெட்ராஸ் படத்தில் ஜானியாக நடித்தவர்) அவரை மிரட்டி கையெழுத்து கேட்கிறது காவல்துறை. ஆனால் அவர் மறுக்கிறார். அவரை ஏன் அடைத்து வைத்துள்ளனர்? எதற்குக் கையெழுத்து கேட்கின்றனர்? என்ற விஷயத்தைக் கடைசி வரை சஸ்பென்சாகக் கொண்டு சென்ற திரைக்கதை படத்தைத் தூக்கி நிறுத்துகிறது.

அப்பாவி இளைஞனை நக்சலைட்டாக சித்திரிக்கிறார் துணை ஆணையர். அதற்கு தானும் உடந்தையாக விட்டோமோ என்ற குற்ற உணர்வில் அந்த இளைஞனைக் காப்பாற்ற போராடுகிறார் சமுத்திரக்கனி.



விமர்சனம் என்ற பெயரில் படத்தின் மொத்த கதையும் சொல்வது அறம் ஆகாது. எனவே மீதியை நீங்களே பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். கதாபாத்திரங்களைக் குறித்து பார்ப்போம்.

ரைட்டர் ஆக நடித்துள்ள சமுத்திரக்கனி நடிப்பு இயல்பாக இருக்கிறது என சொல்லிவிட முடியாது. அதற்காக மிகையான நடிப்பு எனவும் ஒதுக்கிவிட முடியாது. இயல்புக்கு அருகில் நிற்கிறார் என்று வேண்டுமானால் சொல்லலாம். அவர் மிகவும் கடுமையான கதாபாத்திரத்தை ஏற்றிருந்தாலும் இயன்றவரை சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். ஒரு சில இடங்களில் அவரது நடிப்பு மிகையாகவும், குறைவாகவும் தெரிகிறது. இறுதிகட்ட காட்சியில் சமுத்திரக்கனியின் ஆவேசமான நடிப்பு நம்மையும் ஆவேசம் அடைய செய்கிறது.

அடுத்து தேவகுமாரனாக நடித்திருக்கும் ஹரி நடிப்பு இயல்பாக இருக்கிறது. அப்பாவி இளைஞனின் கதாபாத்திரத்தில் சிறப்பாக நடித்திருக்கிறார். தமிழ்ச் சினிமாவின் முக்கியமான நடிகராக வருவார் என்பதில் சந்தேகமில்லை.

ஆணையராக நடித்திருக்கும் நடிகர் (பெயர் தெரியவில்லை) மீது நமக்கே கோபம் வரும் அளவிற்கு மோசமான போலீஸ் அதிகாரியாக அசத்தலான நடிப்பை தந்திருக்கிறார். அவரை சாதி வெறி பிடித்தவர் எனக் காட்டியுள்ளனர். ஆனால் அவர் வட மாநிலத்தைச் சேர்ந்தவராக சித்தரிக்கப்பட்டுள்ளது. வேறு எதுவும் பிரச்சினை வந்துவிடக் கூடாது என்பதாகவும் இருக்கலாம்.

சிறிது நேரமே வந்தாலும் நிறைவான நடிப்பைத் தந்துள்ளார் இனியா. அந்தக் குதிரை சீன் வேற லெவல்.

இன்ஸ்பெக்டராக நடிக்க கவிதா பாரதி, ஒரு காட்சியில் மட்டும் உயரதிகாரியாக நடித்த போலீஸ் வெங்கட், தேவகுமாரன் அண்ணனாக நடித்துள்ளவர், வக்கீலாக நடித்துள்ளவர் என அனைவரின் நடிப்பும் பாராட்டுக்குரியது.

முக்கியமான கதாபாத்திரம் ஒன்று உள்ளது அவர்தான் அந்தோணி (மேற்கு தொடர்ச்சி மலை கதாநாயகன்) காவல் நிலையத்தில் எடுபிடி வேலை செய்பவர். இறுக்கமான படத்தில் இவரது காமெடிகள் கைதட்டலைப் பெறுகிறது. ராஜா என்ற கதாபாத்திரத்தில் சர்வசாதாரணமாக நடித்துள்ளார்.

படத்திற்குப் பெரிய பலம் வசனங்கள் எனலாம்.

‘‘உன் கையில் இருக்கும் குறைந்தபட்ச அதிகாரத்தை வச்சி மக்களுக்கு நல்லது செய்”

‘‘போலீஸ்ல அதிகாரத்தில் இல்லாத எல்லாருமே அடியாள்தான்”

‘‘படிச்சிக்கிட்டா மேல தெருக்கு வர முடியுமானு எனக்கு தெரியாது. ஆனா மேலே வந்துரலாம்”

“சாணி அள்ளுறது ஒன்னும் கேவலமான வேலை இல்லை ஆனா இது தான் செய்யணும்னு சொன்னா செய்ய மாட்டேன்”

‘‘உன் சாதி ஆம்பளையவே குதிரை ஏற விடமாட்டேன் பொம்பளை உன்ன விட்டுவிடுவேனா”

இதுவரை பேசப்படாத காவலர் சங்கம். RTIல் இருக்கும் ஆபத்துகள் போன்ற பல புதிய பிரச்சனைகளைப் பேசியுள்ள புதுமுக இயக்குநர் பிராங்ளின் ஜேக்கப்பை பாராட்டலாம். அவரை இனங்கண்டு வாய்ப்பளித்த தயாரிப்பாளர் பா. ரஞ்சித் அவர்களுக்கு வாழ்த்துக்கள்.

கிறிஸ்துமஸை ஒட்டி வெளிவந்துள்ள ரைட்டர் படம் ஒரு விஷயத்தை மட்டும் உணர்த்தி விட்டது. தேவகுமாரனாகவே இருந்தாலும் அதிகார வர்க்கத்தைப் பொறுத்தவரை கிள்ளுக்கீரைதான்.. ரைட்டர் மாற்றத்தை நோக்கிப் பயணம்.

## படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!

கதை சொல்லி களிடமிருந்து கதைகள்

கவிஞர்களிடமிருந்து கவிதைகள்

கட்டுரையாளர் களிடமிருந்து கட்டுரைகள்

பள்ளி ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமி ருந்தும் அறிவியல் சார்ந்த, கல்வி சார்ந்த செய்திகள் என வாசகர்களின் பங்கேற்பினை கண்ணாமூச்சி எதிர்பார்க்கிறது...

மன்னார்குடி பற்றிய நல்ல செய்திகள் பழைய நினைவுகள் மன்னார்குடி சார்ந்த உங்களின் கனவுகள் அனைத்தையும் எழுதி அனுப்புங்கள்.

தகுதியான படைப்பிற்கு களம் அமைத்துக் காத்திருக்கிறது கண்ணாமூச்சி!

படைப்புகள் அனுப்ப வாட்ஸ்அப் எண்

**9659335462**

மின்னஞ்சல்: kannamoochi.mannai@gmail.com

கண்ணாமூச்சிக்கு இதழ் வளர்ச்சி நிதி அனுப்ப கூகுள் பே 9659335462 விவரத்தை எங்கள் வாட்ஸ்அப் எண்ணிற்குத் தெரிவிக்கவும்.

கவிதை

# அப்பாவின் புகைப்படம்

## கோ.பூமாரி



*நான் வரும்வரை*
*தெருவோர குத்துக்கல்லில்*
*உட்கார்ந்து*
*என்னைத் தேடுவதற்கு*
*இப்போது யாரும் இல்லை!*

*வெளியூருக்குச் செல்கிறாயா?*
*தனியாகப் போகிறாயா?*
*என்றைக்குத் திரும்பி வருவாய்?*
*விசாரணைகள் அற்ற தனிமை*
*கொஞ்சம் கொஞ்சமாய்த் தின்கிறது!*

*அதிகாலை நாளிதழை*
*ஆவி பறக்க ருசிக்க*
*ஆள் இல்லை இப்போது!*

*மேலப்பிஞ்சை*
*விலைக்கு வருகிறது..*
*இப்போது வாங்கிப்போட்டால்*
*எப்போதும் நல்லது.*
*எதிர்கால உத்தியோடு*
*ஆலோசனை சொல்ல எவருமில்லை!*

*வீட்டிற்கு வருகின்ற*
*தாமத இரவுகளில்*
*வெளிநாட்டு யோகம்*
*உனக்கு இருக்கிறது*
*நம்பிக்கை துளிர்த்த குரல் இப்போது இல்லை!*

*சின்னவனையும்*
*கரை சேர்க்க வேண்டும் குடும்பக் கவலைகள்*
*பேசுவதற்கு*
*ஆள் இல்லை இப்போது!*

*எல்லாம்*
*இருந்த போதும்*
*ஏதோ ஒரு வெறுமை மட்டும் கூடவே!*

*கவலைகள் நிறைந்து*
*காலம் அநாதியாகும் போது*
*இன்றைக்கும்*
*ஆறுதல் தருகிறது*
*ஆளோடியில் மாட்டியிருக்கும்*
*அப்பாவின் புகைப்படம்.*

பதிவு

# ஒரு மீசையும்.. தீர்ந்த ஆசையும்.!

## உதவிய இயக்குநர்கள் சரவணன், சசிகுமார்



மன்னார்குடி ஆசிரியர்களின் பெரு முயற்சி!

ஒரு மாலை நேரம் மன்னார்குடியில் உள்ள ராகம்.

ஜெராக்ஸில் இருந்து டூ வீலரை எடுக்கும் தருணத்தில் அந்த மீசை வழி மறித்தது.

"தம்பி..நீங்க மண்ணு,தெருவுன்னு நாளும் அலைஞ்சிகிட்டிருக்கீங்க.உங்க கிட்ட பேசனும்.எப்போ ப்ரீ ஆவீங்க!" என்றார் அவர் பாணியில்.

நானும் சற்று நக்கலாக,

"நம்மள நாமளே ப்ரீ பண்ணிக்கிட்டாதா

அண்ணே. சேதிய சொல்லுங்க."

என்றவாறே டூ வீலர் கீயை இடப் பக்கம் திருகி அணைத்தேன்.

அந்த மீசை சொன்னது,

"தம்பி..என் பையன் கூட படிச்சவன். அவன் பிரெண்ட்.

ஆணழகன் போட்டிக்கு ட்ரை பண்ணுறான். அந்தப் போட்டியில் ஜெயிக்க நியூட்ரிஷன் புட்,அட்மிசன் சார்ஜ், போக்குவரத்துச் செலவு எல்லாம் இருக்காம்.நீங்க உங்க தோதுக்கு லயன்ஸ் கிளப் மூலமா உதவுனா நல்லா இருக்கும் தம்பி." என்றார்.



"அண்ணே..இது வரைக்கும் என்னிடம் எதுவும் நீங்க கேட்டதில்லை.நிச்சயம் உதவ ட்ரை பண்ணுறேன்னே.அந்த பையனை என்னிடம் பேசச் சொல்லுங்கண்ணே." என்றவாறு அவரிடம் இருந்து விடைபெற்றேன்.

நான் வீடு வரவும் அந்தப் பையன் பேசவும் சரியாக இருந்தது.

"யார் நீங்க!?"

"அப்பா பேசச் சொன்னாங்க சார்.என் பேரு முத்துக்குமார்.நான் மயிலாடுதுறை மாவட்டம் நீடூரில் இருக்கேன் சார்." என்றார்.

"தம்பி.என்ன உங்களுக்குத் தேவைப் படுதோ அதை சுருக்கமா சொல்லுங்க தம்பி."என்றேன் எனது நேர நெருக்கடியைக் கவனத்தில் கொண்டு.

அவரின் ஏழ்மை, குடிசை வாழ்வு, எதிர்காலக் கனவு இவற்றை எல்லாம் என் காதில் சொல்ல ஆழ வாங்கிக் கொண்டேன்.

"தம்பி..சென்னையில் நடைபெறும் போட்டியில நீங்க கலந்து கொள்ள எவ்வளவு ரூபா செலவாகும்." என்றேன்.

"ஒரு 50 ஆயிரம் ரூபா இருந்தா போதும் சார்!" என்றார் ஏக்கமான குரலில்.

எனக்குள் எப்படியாவது,எந்த விதத்திலாவது இவருக்கு உதவிவிடத் தோன்றியது,காரணம் இவருக்குப் பரிந்துரை செய்த அந்தக் கம்பீர மீசை.

"சரி.தம்பி உதவ முயற்சிக்கிறேன். இதையே நம்பி இருக்காம நீங்களும் பணம் புரட்டும் வழியப் பாருங்க." என்றபடி இணைப்பைத் துண்டித்தேன்.

முத்துக்குமார் படும் கஷ்டங்களை மீடியா வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தால் கவனம் பெற்று அவருக்குத் தமிழக அரசோ,எவரோ உதவுவார்கள் எனும் அடிப்படையில் காமதேனு கட்டுரையாளர் என் அன்புச் சகோதரர் கரு.முத்து அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று,முத்துக்குமாரின்

செல்பேசி எண்ணையும் அவரது வாட்ஸ் அப் எண்ணிற்குத் தட்டி விட்டேன்.

முத்துக்குமாரிடம் பேசியவர்,இரண்டொரு நாட்களில் இரண்டு பக்கங்களில் உருக்கமான உன்னதக் கட்டுரையைக் காமதேனுவில் தீட்டி விட்டார்.அவர் தீட்டிய கட்டுரையில் மனம் லயித்தேன்.அந்த கட்டுரை வீடியோ எடுக்காத படமாக கண்ணுள் விரிந்தது.

கட்டுரை வந்தால் மட்டும் போதுமா?. முத்துக்குமாரின் கஷ்டங்களும்,அவரின் கனவுகளும் நிறைவேற வேண்டுமே என்பதில் எனது கவனம் முழு முனைப்பாய் இருந்தது.

50 ஆயிரம் ஒரு பெருந் தொகை லயன்ஸ் கிளப் என்றால்,உதவும் மனப்பான்மை உள்ள ஒரு ஐந்து பேரையாவது பிடிக்க வேண்டும்.ஒரே நபரிடம் பெற்றுக் கொடுத்தால்தான் உண்டு என எண்ணிய போது என்னுள் ஆபத்பாந்தவனாக மின்னெலென தோன்றிய உருவம்தான் இயக்குனர் இரா.சரவணன்.இவர் விகடனில் திறம்படப் பணியாற்றி,

கத்துக்குட்டி,உடன் பிறப்பே திரைப்படம் எடுத்த இயக்குனர்.பலருக்கும் உதவி செய்த உன்னதன்.என் ஆருயிர்த் தம்பி.

இயக்குனர் சரவணனுக்கு காமதேனு கட்டுரை,முத்துக்குமார் தகவல்கள் இவற்றை அவரின் வாட்சப்பிற்கு அனுப்பி,

"தம்பி சசிகுமார் சார் அல்லது சூர்யா சார் இவர்கள் மூலமாக அந்த ஏழைப் பையனுக்கு உதவ முயற்சி செய்யுங்கள்." என்றேன்.

மறுநாள் என் செல் முனைக்கு வந்தவர்,"அண்ணே..உங்க மெசேஜ் இப்பதான் பார்த்தேன்.இதுவரை என்னிடம் எந்த உதவியும் கேட்காதவர் நீங்க.முதன் முறையாக என்னிடம் கேட்டு இருக்கிறீர்கள்." என்ற போதே அந்த மீசையிடம் நான் பேசிய டயலாக் நினைவுக்கு வந்தது.

ஒத்திசை உணர்வுகள் எனக்கும் தம்பி சரவணனுக்கும் எப்போதும் உண்டு.

"எல்லார்கிட்டயும் பேசுறேன்னே.. எப்படியாவது அந்தப் பையன் கனவ நிறைவேத்துவோம்ணே!" என்றார் கருணை பொங்கும் குரலில். சொல்லியபடியே என்னிடம் கூட சொல்லாமல் அந்த முத்துக்குமார் வங்கிக் கணக்கில் ரூ.50,000/ வரவு வைத்து விட்டார்.

முத்துக்குமாரும் சென்னையில் ஏகப்பட்ட



நபர்கள் கலந்து கொண்ட ஆணழகன் போட்டியில் 3 ம் பரிசு வென்றார்.

பழைய கஞ்சியும்,எழ்மையின் நிமித்தம் மாட்டுக் கறியும் உண்டு வாழ்ந்த முத்துக்குமார் பெற்றது மூன்றாம் பரிசு அல்ல..அதுவே முதல் பரிசு என எண்ணத் தோன்றியது.

"தம்பி சரவணன்..நீங்க பணம் அனுப்புறதா இருந்தா, நானே 3 பைசா வட்டிக்கு வாங்கி கொடுத்திருப்பேனே." என செல்லில் கலங்கிய போது,இல்லண்ணே அந்தப் பணத்தை எனக்கு சசிகுமார் சார் கொடுத்துட்டார்ணே என்றார்.

அது அந்த சசிகுமார் சாருக்கே வெளிச்சம்.

இது வரையில் அந்த முத்துக்குமாரை நானோ,இயக்குனர் சரவணனோ,சசிக்குமார் சாரோ.. பார்த்ததில்லை. முகம் பார்க்காத ஒருவருக்கு..அகம் பார்த்து செய்த உதவி இது.

போட்டியில் ஆணழகன் பட்டம் வென்றது முத்துக்குமார் மட்டுமல்ல..

கூடவே காமதேனு கட்டுரையாளர் கரு.முத்து,இயக்குனர் இரா. சரவணன்,சசிகுமார் சார் மற்றும் அந்த கம்பீர மீசைக்குச் சொந்தக்காரரும் சுந்தரக்கோட்டை அரசு நடுநிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் - தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில செயற்குழு உறுப்பினருமான அண்ணன் ஆர்.கே என அழைக்கப்படும் இரா.கிருஷ்ணமூர்த்தியும்தான்.

சமூகத்தின் மீதான கருணையும்,பேரன்பும் கொண்டவர்களைப் பார்க்கும் போதெல்லாம் அன்னைத் தெரசா இன்னமும் வாழ்ந்து கொண்டிருக்கிறார் பலரது வடிவங்களில் என்றே எண்ணத் தோன்றுகிறது.

**- க.தங்கபாபு**

மண்வாசம்

# போருக்கெல்லாம் பெரிய போரு வைக்கோலுப் போரு!

## - இரா.மோகன்ராஜன்

**எ**த்தனையோ போரையும் புரட்சியையும் பத்தி கேள்விப்பட்டிருப்போம், வாசிச்சிருப்போம். ஆனா போருன்னா உடனே நம்ம நெனப்புக்கு வர்ற வைக்கப் போர பத்தி பேசாம போக முடியாது.

*வரப்புயர நீருயரும்*
*நீருயர நெல் உயரும்,*
*நெல்லுயரக் குடி*
*உயரும்*
*குடி உயரக் கோல்*
*உயரும்.*
*கோலுயரக் கோன்*
*உயர்வான்*

என்பது அவ்வை பாட்டு. கோல் உயரணுமுன்னா நெல் உயர வேணும் என்பது அரசுக்கும் வேளாண் பொருளாதாரத்துக்குமான தொடர்ப ஒறவ வெளக்குது. வீட்டுக்கு வீடு வானொலிப்பொட்டி அந்தஸ்துப் போல வீட்டுக்கு வீடு வைக்கப் போரின்(வைக்கோல்) அளவு ஒரு அந்தஸ்தாக இருந்துச்சி.

ஒற்றை வைக்கோலு புரட்சி, பசுமைப்புரட்சி, வெண்மைப் புரட்சி என்று பொரட்சி பத்தி பேசினாலும் இந்த வைக்கலு பத்தி யாரும் பேசுறது கிடையாது.

"ஆத்தா நா பாசாயிட்டன் வைக்கலுக்கு படிக்கப்போறன்னு!" சொன்னாலும் "நீ வக்கிலுக்குதான் படி; வைக்கபோருலதாம் படி!" என்று பெரிசுகள் கிண்டல் செய்த காலங்களும் உண்டு. அதுக்குப் பல பொருள் இருந்துச்சு.

உழவன் கணக்குப் பாத்தா உழக்கு மிஞ் சாது என்பது சொலவடை. வைக்கலு எஞ் சினா, நெல்லு மிஞ்சாது. நெல்லு எஞ்சினா வைக்கலு மிஞ்சாது என்பது அனுபவ மொழி. பசுமைப்புரட்சிக்கு ஒரு குட்டு. எளதல வளரும் நெல்லு காணாது என்பது சீம ஒரம் போட்டப் பயிரு பற்றிய நமது உழவர்களின் அனுபவ நக்கல்.

மாடு வச்சு போரடிச்சா மாளாது என்பதால் ஆனை கட்டி போரடிச்ச சோழ வளநாடு என்ற புகழெல்லாம் இந்த வைக்கப்போருக்குத் கெடச்ச பெரும.

அறுத்த நெல்லு மனுசனுக்கு, அடிபட்ட வைக்க மாட்டுக்கு. கோட்ட வெத நெல்ல சம்சாரி பட்டினி கிடந்தாலும் அவிச்சு திங்கமாட்டான். தாவெறு வயிறோட கிடந்தாலும் கட்டுத்தறி மாட்டுக்குக் கைபுடி வைக்கலு போடாம திரும்ப மாட்டான்.

கட்டுத்தறிக்கும் வைக்கப்போருக்குமான ஒலகே வேறெ. நெல்லு பயிருக்கும் உழவனுக்குமான ஒட்டு ஒறவு களத்து மேட்டுலேந்து வீட்டுக்கு வந்தாலும் விட்டுப் போகாது. இந்த வைக்கப்போரு அதுல ஒன்னு.

பக வந்தாலும், ஒறவு வந்தாலும் வைக்கப்போருலதாம் போயி முடியும். அது ஒரு காலம். ஊருக்கு ஊரு வர்ற பக, ஒறவுக்கு ஒறவு வார பக எல்லாம் வைக்கப்போருலதாம் பத்திக்கிட்டு எரியும், பகையும் பொகையுமா பரவும்.

ஊரு கோழி முழுக்க பச்சவாசம் புடிச்சு புது வைக்கப்போருல ஏறி சீச்சுப் போடும். வயலு, வரப்பு மேட்டுல உட்ட அர கொற சண்ட முழுக்க வைக்கப்போரு கோழிய சாக்க வச்சு கப்புன்னு கௌம்பிடும். கையில புடிச்ச கோழி அணக்கமா சத்தம் போடம ஒறங்குமுன்ன இவங்க சண்ட ஓயாது.

புது பொங்கலு போல புது வைக்க போரு வாசம் நாசிலே நிக்கும். சூதனமா புடுங்கலன்னா வெறல அறுத்துடும்.

மாட்டுக் கொட்டகை கட்டுத்தறி மாடுகளுக்கு பொங்க அறுப்பு வைக்கலையும், குறுவ வைக்கலையும் கலந்து போட்டு கொடுக்கனும். புது வைக்கல் வாசம் அதுக்கு

பொங்கலுக்குச் சாப்பிடுற செங்கரும்பு போல ஆவலாதியாப் பறந்து திங்கும் ஆனா பல்லு தேஞ்ச மாடு போல எத்தனை அசை போட்டாலும் தொண்டக்குழிக்குள்ள எறங்காது.

புதுசா பல்லு மொளச்ச கன்னுக்குட்டி மோந்து பாத்துட்டு பாலு ஊட்ட பேயிடும். புது வைக்க திங்க முடியாத மாடுங்க ஒதறி போட்டு பின்னங்காலுக்கு இழுத்து போட்டு சொகமா படுத்துக்கும்.

முடிஞ்ச அதுலயே சாணி, மூத்திரம் போய் மிதுச்சி வைச்சிடும். களத்து மேட்டுல



உழைச்சு முடிச்சு வீட்டுக்கு வார உழவாளிக்கு இத பாக்குற சமயத்துல வீட்டுக்காரிக்கும், மாட்டுக்கும் சேத்து வசவு கிடைக்கும். மாட்டுக்கும் ரெண்டு இழுப்பு விழும்.

அடக்கோழிங்க அடையவிட்டு ராக்கெட்டுப் போல கௌம்பி புது வைக்கலுக்குதாம் போகும். அங்கதா அது அவசரத்துக்கு பதரு நெல்லு, குதுருநெல்லுங்க அலுங்காம குலுங்காம கெடைக்கும். ஆனா தைமாச குளுருக்கும், வெயிலுக்கும் வீட்டு நாயிக்கு அணக்கமான எடம் புது வைக்கப் போரு நெழலுதான்னு எத்தனை அது வாயில மாட்டினாலும் அடக்கோழிக்கு வெளங்குறதே இல்ல. “வைக்கப்போருல படுக்குற நாயி” என்று சொந்த பந்தங்கள திட்டுறவங்களுக்கத்தான் அட கோழி எரிவு தெரியும்.

தா திங்க முடியாதத எங்கேருந்தோ பறந்து வந்த அடக்கோழி திங்குதேன்னு புது வைக்கப்போரு நிழலுல தூக்கம் போடுற நாயிக்கு கடுப்பு தலைக்கு ஏறும். வைக்கப்போரு அண்டையிலும், உச்சியிலும் சீச்சி தூக்கம் போடுற நாயி தலையில வைக்கல அள்ளி போட்ட அடக்கோழிய உண்டு இல்லைன்னு பண்ணிடும். புது வைக்க வீட்டுக்கு வந்தா அக்கம் பக்கம் மட்டும் இல்ல எல்லா பக்கமும் இப்படித்தான் பத்திக்கும்.

வயலு வெளச்சல் வைக்கலு போரு பவிசுலதாம் தெரியும். களத்து மேட்டுல புது வைக்கதாளுல கயிறு திரிக்கிறதே ஒரு தனி கல. குறிப்பிட்ட அளவுள பிரி திரிச்சு அதுல வைக்கல அடுக்கி உருட்டி கட்டுவாங்க இதுக்கு தெரைன்னு பேரு. அதுக்கு அந்த பெயரு எப்படி வந்துச்சுன்னு யோசிச்சா வீரபாண்டிய கட்ட பொம்மன் வசனம்தான் நினைவுக்கு வரும். வரி வட்டி திரை கிஸ்தின்னு. திரைன்னா வெறும் வைக்க திரை மட்டுமில்ல அதுக்கு வரின்னு ஒரு பேரும் இருக்கு. தெரட்ச வைக்கலுக்கு வரி போட்டுருப்பாங்களோன்னு தோனுது. அதாலதாம் அதுக்கு அந்த பேரா இருக்கும் போல.

வைக்கலை கூளம்னு சில பக்கத்துல சொல்வாங்க. வைக்க போரு போடருதுக்குன்னெ சில ஆளுங்களும் ஊருகளும் பேருஎடுத்திருக்குங்க. தாமரங்கோட்ட, மஞ்சவயலு, தெம்பரனு ஊரு ஆளுங்க வீடு கட்டுராபோல வைக்கப்போரு உடைப்பாங்க.

களத்து மேட்டுலேந்து பார வண்டில வார வைக்க தெரைய லாவகமா எறக்கி தெரைய ஒண்ணொன்னா ஒடைச்சு அடுக்குவாங்க அது வூடு கட்டுறது போல. மேக்கூர, முகப்பு, சைடுன்னு ஆளுங்க சைஸ் பண்ணுவாங்க. சிற்பி செலைய செதுக்குறா போல தெரைய அடுக்கி சைசுக்காக திரும்ப போருல வைக்கல பிடுங்குவாங்க இப்படி புடுங்குற வைக்கலே ஒண்ணு ரெண்டு திரைக்குக் காணும்.

மேக்கூரய பதமா காலாலே அழுத்தி மழ நீரு எறங்காமே பாத்து பாத்து போடுவாங்க. எட்டியிருந்து பாத்த ஒரு வீடு போல இருக்கும் போரு.

வீட்டுக்கு தென்ன ஓல வேயிரவங்க அதுக்கு மேல வைக்கல பரப்பி தாம்பு கயிரு போட்டு இழுத்து கட்டுறது சில பக்கத்து நடமொற. மழ காலத்துக்கும், கோட வெயிலுக்கும் எதமா,



பதமா இருக்கும். தென்ன ஓலையும் மூணு வருசத்துக்கு இத்து போகாம இருக்கும்.

சொல்லிக்கிட்டே போகலாம் மனுசம் பவுசுங்குறாப்போல வைக்கலு பத்தி ஏகம் போகமா சொல்லலாம்.

சத்துரபதி சிவாஜி, தன்னோட படை வீரனுங்க உழவருங்க வைக்கோலு படைப்ப கொளுத்தக் கூடாதுன்னும், படை விலங்குகளுக்கு உழவருங்ககிட்டேருந்து காசு கொடுத்து வைக்கோல் வாங்கனுமின்னும் உத்தரவே போட்டுருந்தாரு. குளிரு கணப்புக்கும். படை விலங்கு பொழப்புக்கும் வைக்கோலும் முக்கியம். எந்த போரு முக்கியம்னு மன்னருக்கே தெரிஞ்சிருக்கு.

மனுசன் பொறப்பு தொடங்கி எறப்பு வர வைக்கலுக்குள்ளதாம் வாழ்க்க. தேவகுமாரன் மாட்டுக் கொட்டகையில வைக்கலு பரப்புலதான் பொறந்து கெடத்தினாங்க. பச்சபுள்ள விக்குனா தொண்ட குழிக்குள்ள வைக்கலு வப்பாங்க. பச்சைப் பாட கட்டி வைக்கலு சிம்மாடு வச்சுதாம் சவம் தூக்குவாங்க.

வரட்டி தட்டுறது, பொங்கலுக்கு பான வனைஞ்சு பார வண்டில ஏத்துறது வக்கலு திரைச்சுதாம். அத எதமா எறக்கி வைக்கிறதும் வைக்கலுலதாம். பானை ஒடயாம எறக்கி வைக்க பிரிமனைக் கட்டு வளையம் வளையமா பார வண்டில தொங்கவிட்டு வருவாங்க யாவாரிங்க.

கோடு தொறந்து பொங்கினப் பானைய சூரியன வேண்டிக்கிட்டு அந்த பிரிமனை யிலதாம் பொங்க பொங்க எறக்கி வைப்பாங்க.

எல்லாத்துக்கும் மேல சொர வெதய சொர குடுக்கையில பதப்படுத்துறது போல வெத நெல்ல வைக்க கோட்டையிலதாம் பதப்படுத்துவாங்க.

எரவிரவா தேத்தண்ணிய குடிச்சிக்கிட்டு ஆளுங்க பவுணர்மி நெலா வெளிச்சத்துல வைக்கப் பிரி திரிச்சுக் கோட்டை கட்டுறதே ஒரு அழகுதான். பத்துக் கோட்டைனாலும் கடைசிக் கோட்டை பொது ஆவுடையாருக்கு. மொதக் கிடாரி பொது ஆவுடையாருக்கு நேர்ந்துவிடுறது வழக்கம்.

கோட்டைய மொழுகி, ஓரமா அடுக்கி வச்சு வெதப்புக் காலத்துல கொளத்துல முக்கி எடுக்குறப்ப வைக்கலோட வெத மொளச்சுவற வாசம்தான் இன்னைக்கும் சீவிதமா இருக்கு.

அற்றை திங்கள் அவ்வெண்ணிலவில் என்பது போல இன்னைக்கு கோட்டையும் இல்ல, வைக்கபோருமில்ல. காருதாம் நிக்குது. கட்டவண்டி எடத்துல.

நினைவோடை

# எங்கள் காலம் அப்படி இருந்தது...

## செல்லம்மா பேத்தி

எங்க அம்மா, மாமாக்களை வளர்ப்பதற்கு ஆத்தாவுக்கு கைத்தொழிலில் ஒன்றாக அப்பளம், அப்பளப்பூ வியாபாரம் இருந்தது. அந்தவேலையை எங்க மாமாக்களை ஆசிரியர், இஞ்சினியர் ஆக்கிய பின்னும் எங்களுடைய சிறுவயதில் செய்து கொண்டு இருந்தார். உளுந்தை கழுவி காய வைத்து அதை கை திருவையைக் கொண்டுகொஞ்சம், கொஞ் சமாக போட்டு நைசாக அரைத்து, (எங்களால் அந்த திருவையை சுற்றக்கூட முடியாது) பின் உப்பு மாவில் ஊற்றி பந்துபோல் பிசைந்து கொள்ள வேண்டும். பின் தேங்காய் எண்ணெய் தொட்டுக் கொண்டு குடக்கல்லில் வைத்து இரும்பு உலக்கையை கொண்டு இடிப்பாங்க. இடித்து இடித்து அவங்க கை காய்த்து போய் இருக்கும். காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்து இடிக்கும் அழகே தனி. அப்போது ஆத்தாவிற்கு சுமார் 70 வயது இருக்கும். அந்த வயதில் அவர் செய்த வேலையை நினைத்து பார்த்தாலே எனக்கு இப்ப ஆச்சரியமா இருக்கு. கிட்டதட்ட ஒரு மணி நேரம் இடித்து நீளமாக உருட்டி (எங்க வீட்டில் அப்போது கத்தி கிடையாது) அதனால் தோசை திருப்பியைக் கொண்டு சின்ன, சின்ன வில்லையாக ஒரே அளவாக வெட்டி ஒரு பாத்திரத்தில் வைத்து மூடி விடுவார்கள். ஒவ்வொரு வில்லையை எடுக்கும் போது சுலபமாக வரும். அது பார்ப்பதற்கு ஒன்றுடன் ஒன்று கோர்வையாகத்தான் இருக்கும். மாங்கய் கீத்து போட்டு கீறி பொடிபோட அடுக்கடுக்காக வைத்திருப்பார்கள் அல்லவா அது மாதிரி இருக்கும். அதை ஒன்று ஒன்றாக எடுத்து பலகையில் குழவியைக் கொண்டு வட்டமாக மெலிதாக தேய்த்து கொடுப்பாங்க. அதை வீட்டுத் தாழ்வாரத்தில் பாயைப் போட்டு காயவைப்பது எங்கள் வேலை. எங்களுக்கு பள்ளி விடுமுறையின் போதுதான் எங்க வீட்டில் அப்பளம், அப்பளப்பூ வேலை தடபுடலுடன் நடக்கும். மாவை சாப்பிடவே அவ்வளவு சுவையாக இருக்கும். எங்களுக்கு சாப்பிட கொஞ்சம் மாவு கிடைக்கும். அந்த மாவை வைத்து ஆத்தாபோல் தேய்த்து பார்ப்பேன். மாவு பலகையில் ஒட்டிக் கொண்டு ஆத்தா போடுவதுபோல் போட வராது. எப்படியும் செய்துவிட வேண்டும் என்று பலகையுடன் மல்லு கட்டுவோம். அப்பளம் உலர்ந்தவுடன் எடுத்து அடுக்கி எண்ணி நூல் கொண்டு கட்டி வைப்பதும் எங்களுடைய வேலைதான்.



அப்பளப்பூ என்றால் உருண்டையை வெட்டாமல் அப்படியே பாத்திரத்தில் வைத்து கொஞ்சம் கையில் எடுத்துக் கொண்டு பலகையில் கையால் இழுத்து தேய்க்க வேண்டும். பலகையில் விதவிதமான பூ போட்டு இருக்கும் ஆத்தா நூறு பலகை வைச்சிருந்தாங்க. அவங்க பலகையில் தேய்த்து கொடுப்பதை எடுத்து முறம், சல்லடை, தாம்பாளம் போன்றவைகளை குப்புற கவிழ்த்து அதன்மேல் வரிசையாகப் போட வேண்டும். எடுப்பதற்கும் பழக்கம் வேண்டும். தேனை பிழிந்து பங்கு போட்டுக் கொள்வோம். அப்ப நிறைய பூச்சி செத்திருக்கும். அப்ப நாம தப்பு பண்ணியுள்ளோம் என்று இப்ப தோணுது. அதில் உள்ள மெழுகை கொண்டு

பாத்திரங்கள் அடைக்கலாம்.

எங்கள் தெருவில் உள்ள ஆடு, அளவுக்கு அதிகமாக அரிசி, நெல் சாப்பிட்டுவிட்டால் வேறு வழியில்லாமல் அந்த ஆடு குழம்பாகவும், உப்பு கண்டமாகவும் ஆகும். சூழ்நிலை உருவாகிவிடும். கறியை உப்பு, மிளகாய்தூள், போட்டு காயவைத்து விடுவார்கள். அது எங்க வீட்டு டப்பாக்களிலும் இருக்கும். அதை மழைக் காலங்களில் குழம்பு வைத்தும், வறுத்தும் சாப்பிடலாம். பக்கத்து வீட்டுக்காரர்கள் ”குழம்புக்கு ஒன்றும் இல்ல நாலு உப்புகண்டம் இருந்தா கொடு” என்று கேட்டு வாங்கி போனதையும் பார்த்து இருக்கின்றேன்.

நாவற்பழம், இலந்தை பழம் சாப்பிட்டுவிட்டு கொட்டையை வெளியே துப்பிடு என்று சொல்லி கொடுப்பாங்க. சிறுவயதில் பேசிக் கொண்டே சாப்பிடும் போது விழுங்கிடுவேன். அப்ப எனக்கு மரம் முளைத்துவிடும் என்று அழுததும், அத்தை சமாதானப்படுத்தியதும் கூட உண்டு. புளியம் பழங்களை உடைக்கும் போது யார்தான் முதலில் உடைக்கிறாங்க என்று பங்கு பிரித்து கொடுத்து உடைக்க சொல்வாங்க. புளியம் மரத்தில் பூ, பிஞ்சு, கொழுந்தைக் கூட விட்டுவைக்கமாட்டோம். அதுவும் எங்களின் திண்பண்டங்களில் ஒன்றாக இருக்கும்.

எங்க வீட்டு அடுப்பங்கரையில் இரண்டு உறியும் கொல்லையில் ஒரு உரியும் தொங்கிக் கொண்டு இருக்கும். பூனைக்கும், எறும்புக்கும் பயந்துதான் இந்த ஏற்பாடு. கொல்லை உறியில் கருவாட்டு பானையும், உள்ளே உள்ள உறியில் தயிர்,மோர் பானையின் உள்ளே ஆத்தா காலையில் கடைந்து எடுத்த வெண்ணெய் மிதந்து கொண்டிருக்கும். அப்ப, அப்ப மோர் பானையை இறக்கி வெண்ணெயை ருசி பார்த்ததுண்டு. எறும்புக்கு பயந்து சாப்பாடுகளில் ஒரு பொருளில் வைப்பார்கள். பெயர் ஞாபகம் இல்லை. இதைப் படிப்பவர்களுக்கு தெரிந்தால் எனக்கு தெரியப் படுத்தவும். மண்ணால் ஆனது வட்டமாக இருக்கும். அதில் இரண்டு வட்டம் இருக்கும். நடுவில் பாத்திரம் வைத்திருப்பார்கள். அதை சுற்றியும் தண்ணீர் ஊற்றி இருப்பார்கள். பானைகள் செய்பவர்கள்தான் இதையும் செய்து விற்பார்கள். அந்த தண்ணீரைத் தாண்டி எறும்பு போக முடியாது. சில சமயங்களில் சமைத்துவிட்டு அதில் தூக்கி வைக்காமல் அவசரத்தில் மறந்துட்டு வயலுக்கு போயிடுவாங்க. மதியம் பள்ளி விட்டுவரும் சின்ன அண்ணன் சோற்றில் எத்தனை கல், எத்தனைஎறும்பு இருந்தது என்று செங்கல்லைக் கொண்டு எழுதிவிட்டு பக்கத்தில் ஒரு ரவுண்டு போட்டு அந்த கல்லையும், எறும்பையும் வைத்திருப்பாங்க. இப்ப அந்த அண்ணன் சவுதியில் மருத்துவ பிரிவில் வேலை பாக்கிறாங்க. என் அண்ணன் இந்த புத்தகத்தைப் படிக்க நேர்ந்தால் ரொம்பவும் சந்தோஷப் படுவாங்க. நான் எழுதிய எல்லாவற்றிலும் அவங்க பங்கும் உண்டு. எங்களுக்குப் பட்டப் பெயர் வந்த காரணத்தையும், நாங்கள் அடித்த லூட்டிகளையும் அடுத்து எழுதுகின்றேன்.

**இன்னும் சொல்வேன்...**



சுவடுகள்

# மரண ரயில்பாதை

ஜெயசுபா

மரண இரயில்பாதை என்று கூறப்படும் பர்மாசயாம் இரயில்பாதை என்பது இரண்டாம் உலகப்போரின் போது உருவாக்கப்பட்ட,415 கி.மீ அதாவது 258 மைல்கள் தொலைவு கொண்ட ஒரு நீண்ட புகைவண்டித் தொடர் பாதை.

இரண்டாம் உலகப்போர் சமயத்தில் தாய்லாந்து, பர்மா வழியாக இந்தியா வந்து, இந்தியாவைக் கைப்பற்றி ஆசியா முழுக்கத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர திட்டம் தீட்டியது ஜப்பான். இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கில் ஜப்பான் 1942ஆம் ஆண்டு சயாம் என்று அழைக்கப்பட்ட அன்றைய தாய்லாந்துக்கும், பர்மாவுக்கும் இடையே 415 கிலோ மீட்டர் அளவில் மாபெரும் ரயில் பாதை ஒன்றைக் கட்டமைக்க முடிவு செய்தது. இதற்கு முன்னர் இதே பாதையில் ரயில் பாதை அமைக்க பிரிட்டன் திட்டமிட்டிருந்தது. ஆனால் குன்றுகள், ஆறுகள், காடுகள் என வெவ்வேறு நிலப்பரப்பினால் ஆன அந்த 415 கி.மீ பாதையைக் குடைந்து ரயில் பாதை அமைக்க மிகுந்த பொருட்செலவும், மனிதவளமும் தேவைப்பட்டதால் அந்தத் திட்டம் அப்போது கைவிடப்பட்டது.

அடர்ந்த காட்டுக்கு உள்ளேயும், பல அடர் மலைகளைக் குடைந்தும், சீறிப்பாயும் காட்டு ஆறுகளைக் கடந்தும் இந்தப் பாதை செல்ல வேண்டி இருந்ததால், இதை உருவாக்குவது என்பது மிகவும் ஆபத்தானதாவும், கடினமானதாகவும் இருந்தது ஜப்பானுக்கு. ஏகப்பட்ட உயிர்களைப் பலி கொண்டது இந்தப் புகை வண்டிப் பாதை.

சுமார் 24 மாதங்களில் கட்டி முடிக்கலாம் என்று நினைத்துத் துவங்கப்பட்ட இந்தப் பணி, ஜப்பானியர் மேற்கொண்ட கொடுமையான வழிகளால், பதினைந்தே மாதங்களில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டது..

இதைச் செய்து முடிக்கக் கொடுக்க வேண்டியிருந்த விலை தான் மிக மிக அதிகமாக இருந்தது. அந்த விலையை ஜப்பானியர் கொடுக்கவில்லை..

வேறு யார் கொடுத்தார்கள்..? அப்படி என்ன பெரிய விலை..?

பணி நிகழ்ந்த காலம் 22 ஜூன் 1942 முதல் 17





அக்டோபர் 1943 வரை..

சரியாகச் சொல்ல வேண்டுமானால், தாய்லாந்தில் உள்ள பான் போங் என்னும் இடத்திலிருந்து பர்மாவில் உள்ள தான்பியுசாயாட் வரை ரயில் பாதை அமைக்கும் இந்த மாபெரும் திட்டம் இரண்டு பிரிவுகளாக உருவாகத் தொடங்கியது.

தளவாடப்பொருட்களைப் பொருத்த வரையில், மலாக்கா, சிங்கப்பூர், கோத்தாபாரு, கோலா லிப்பிஸ் போன்ற பகுதிகளில் ஏற்கெனவே போடப்பட்டிருந்த ரயில் தண்டவாளங்கள் பெயர்த்து எடுக்கப்பட்டு புதிய ரயில் பாதைக்குப் பயன்படுத்தப்பட்டன.

இதில் பயன்படுத்தப்பட்ட அத்தனை பேரும், (மலேசியர், சயாமியர், பர்மியர்,சீனர், மற்றும் மலேசியத் தோட்டங்களில் வேலை செய்து கொண்டிருந்த தமிழர்கள் ஆகியோர் ) மலைகளைக் குடைதல், பள்ளம் தோண்டுதல், தரைத்தளத்தைச் சீரமைத்தல், இரும்புத் தளவாடங்களைத் தூக்கிச் செல்லுதல் போன்ற கடும் உடல் உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டனர்.

தொழில்நுட்பம் வளர்ந்திராத அந்தக் காலகட்டத்தில் இது மிகப்பெரிய பணி. பிரிட்டன் கைவிட்ட இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முழுவீச்சுடன் களமிறங்கியது ஜப்பான். தன்னிடம் இருந்த அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த போர்க்கைதிகள், பொறியாளர்களுடன் மொத்தம் 60 ஆயிரம் பேருடன் தொடங்கியது இந்தப் பணி. அவ்வளவு பேர் போதாது

என்பதை உணர்ந்த ஜப்பான், மலேசிய ரப்பர் மற்றும் தேயிலைக் காடுகளில் பணிபுரிந்து வந்த தமிழர்களை வலுக்கட்டாயமாக இதில் ஈடுபடுத்தியது. எங்கு செல்கிறோம், எதற்காகச் செல்கிறோம் எனத் தெரியாமல் கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்லப்பட்டனர் அவர்கள். தெருவில் நடந்து கொண்டிருந்தவர்கள் கடத்திச் செல்லப்பட்டு, அடிமைகளாக இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். ரப்பர் தோட்டத்தில் ஏராளமான சோதனைகள், நெருக்கடிகளைச் சந்தித்த தமிழர்களுக்குக் குடும்பத்தோடு இருப்பது ஒன்றே நிம்மதியளித்திருந்தது. ஆனால், ரயில் பாதைப் பணியில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டபோது, அதுவும் இல்லாமல்போனது. வானத்தில் சூரியன் இல்லாத நேரம் தவிர மற்ற எல்லா நேரமும், மக்களின் வியர்வையும் ரத்தமும் உழைப்பாக உறியப்பட்டது. பணியின் கொடுமை தாங்காமல் அங்கிருந்து தப்பிச் செல்ல முயற்சித்தவர்களின் தலைகள் மற்ற தொழிலாளர்களின் முன்பு கொய்யப்பட்டு அந்தத் தலைகள், மரக்கிளைகளில் தொங்கவிடப்பட்டன.

இந்த வேலையின் மேற்பார்வைப் பொறுப்பை ஏற்று நடத்தியவர்கள் சுமார் 10,000 ஜப்பானியர் மற்றும் மஞ் சூரியர்கள்!

இதில் கட்டாயப்படுத்தி வேலை வாங்கப்பட்டவர்கள் 3,30,000 ஆசியத் தொழிலாளர்கள். பணி நடக்கும்போதே ஒன்றே கால் வருடத்திற்குள்ளாக, இறந்தவர்கள் மொத்தம்: 106,000 பேர். அதில் ஆசியத் தொழிலாளர்கள்: 90,000 பேர்.அதில் தமிழர்கள் மட்டும் 60,000 பேர். பிரித்தானியர்கள்: 6,318 பேர். ஆஸ்திரேலியர்கள்: 2,815 பேர். டச்சுக்காரர்கள்: 2,490 பேர். அமெரிக்கர்கள்: 356 பேர்.100க்கும் குறைவான கனடியர்கள், நியூசிலாந்துக்காரர்கள். ஜப்பானியர்களின் உயிர் இழப்பு பற்றிய புள்ளி விவரங்கள் இல்லை..

காலரா, மலேரியா நோய்களால் கொத்துக்கொத்தாகச் செத்து மடிந்தவர்கள், ஆங்காங்கே குழிதோண்டிப் புதைக்கப்பட்டனர். ஒரு கட்டத்தில், இனி புதைக்க இடமே இல்லை என்றபோது, பிணங்கள் எல்லாம் டீசல் ஊற்றி எரிக்கப்பட்டன. ஐந்து ஆண்டுகாலத்தில் இந்தத் திட்டத்தை முடிக்கத் திட்டமிட்டிருந்தது பிரிட்டன். ஆனால், இதைத்தான் ஜப்பானியர்கள் 15 மாதங்களில் நிகழ்த்திக்காட்டினர். அதற்காக ஒரு லட்ச ஆசிய தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். இதில், மிகப்பெரும்பான்மையானோர் தமிழர்கள். இத்தனைக்கும் பிறகுதான் 1945ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ரயில் சேவை தொடங்கியது. ஜப்பானியர்கள் இதை ஒரு திருவிழாவைப்போலக் கொண்டாடினர். உயிரிழந்தவர்கள்போக, எஞ்சி இருந்த தமிழர்களும் இதரத் தொழிலாளிகளும் சோர்வோடு மலேசியத் தோட்டங்களில் உள்ள தங்கள் வீடுகளுக்குத் திரும்பினர். வேலை





பார்த்ததற்கு ஊதியமாய் ஒவ்வொருவருக்கும் ஒரு மூட்டை நிறைய வாழைத்தார் படம் போட்டு அச்சடிக்கப்பட்ட பண நோட்டுகள் வழங்கப்பட்டன. அதுவே, அவர்களுக்கு ஆறுதலாக இருந்தது. அப்போது, ‘அந்தப் பண நோட்டுகள் செல்லாது’ என அறிவிக்கப்பட்டதை அவர்கள் பாவம், அறிந்திருக்கவில்லை.

உலகப் போர் முடிந்ததும் யுத்தக் கைதிகளாய் இருந்த பிரிட்டன் மற்றும் அமெரிக்க வீரர்கள் அவர்களின் நாடுகளில் கதாநாயகர்களாகக் கொண்டாடப்பட்டனர். பர்மா மற்றும் சீனத் தொழிலாளர்கள் அவர்கள் நாட்டு அரசாங்கத்திடம் இருந்து அடிப்படை வாழ்வாதாரத்துக்கான உதவியினைப் பெற்றனர். எல்லாவற்றுக்கும் மேல் அந்த மக்களுக்கு அந்த நாட்டில் நினைவுச் சின்னங்கள் கூட எழுப்பப்பட்டது. ஆனால், இந்தக் கொடூரத்தில் கொல்லப்பட்ட 60 ஆயிரம் தமிழர்களைப் பற்றிப் பேச அப்போது யாருமே இல்லை. பொருளாதாரத் தேவைக்காகப் புலம்பெயர்ந்ததால், இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும்கூட அந்த மக்களை நினைவுகூறவில்லை எவரும். லட்சக்கணக்கில் பலியானத் தமிழர்களுக்கு இந்திய வரலாற்றில் எந்தப் பதிவும் இல்லை என்பது நிச்சயம் நம்ப முடியவில்லை!

இதைப்பற்றி ஒரு திரைப்படம் பின்னர் வெளிவந்தது. 'A bridge on the river kwai' என்ற அப்படம் 7 ஆஸ்கார் விருதுகளைப் பெற்றது. சில நூறு போர்க் கைதிகளின் துன்பத்தை மட்டுமே சொல்லிய அப்படமும், தமிழர்களின் துயரை மட்டும் பதிவு செய்யவே இல்லை!

கவிதை

# எஞ்சாமி... எந்தாயி...

தாயி
நமக்கு
சாமிதான்
சாமி
நமக்கு
தாயிதான்!

சரீபு கடை
கடலை மிட்டாய்
முந்தானையில்
முடிஞ்சிருக்கும்!

நடவு வயல்
காராசேவு
எனக்காகக்
காத்திருக்கும்!

கொடங்கையில
அணைச்சுக்கிட்ட
கதகதப்பில்
தூங்குவேன்!

அந்த நாளை
எண்ணி எண்ணி
இப்பொழுதும்
ஏங்குவேன்!

சோத்து வாளி
நண்டு சத்தம்
தொணதொணன்னு
கேட்குமே!

கூட்டி வச்ச
கொழம்பு வாசம்
தெரு முழுக்க
வீசுமே!

கூடக் கேக்கு
வாங்கியாந்து
யாருக்கும் தெரியாம
திணிச்சதும்!

ரெண்டு பருக்க
கூட போட்டு
சுடுகஞ்சி ஆத்தி
கொடுத்ததும்!

சனிக்கிழமை
தீபாவளிக்கு
எண்ணெய் தேச்சு
விட்டதும்!

நாளு கிழமை
பொங்கலுக்கு
பிடி சோறு
உருட்டிக் கொடுத்ததும்!

தாயி நமக்கு
சாமிதான்
சாமி நமக்கு
தாயிதான்!



பள்ளிக்கூடம் சேர்த்துவிட்டு
பாதியில் வந்து அழுததும்!
பொழுது சாஞ்சி
வரலைன்னா பரிதவிச்சு நின்னதும்!

அப்பாவுக்குத் தெரியாம
காசு எடுத்துக் கொடுத்ததும்!
அப்பா அடிக்கும் போது
குறுக்கே விழுந்து தடுத்ததும்!

தாயி
நமக்கு
சாமிதான்
சாமி
நமக்கு
தாயிதான்!

மகமாயி
இறங்கி
படுத்துக்கிடக்க
மடிப்பிச்சை கேட்டு நின்னதும்!

கனவு கண்டு
அலறும் போது
கொலுமோர் வச்சிக்
கொடுத்ததும்!

நகரக்காட்டில்
படுத்துகிட்டு
நாளும் நாளும்
அழுவுறேன்!

நடமாடுற
தாயி தான்
நம்ம சாமின்னு
தொழுவுறேன்!

– **கலைபாரதி**

# ஸ்ரீ கணேஷ் ஜெராக்ஸ்

**79/1, தாலுக்கா ஆபிஸ் ரோடு - மன்னார்குடி**

## பொது 'இ' சேவை மையம்

**அனைத்து விண்ணப்பங்களும் கிடைக்கும்**

AADHAAR

Pradhanmantri Fasal Bima Yojana

பதிவுத்துறை
REGISTRATION DEPARTMENT

fssai

Passport Seva

**G.பிரபு - செல்: 9751786700 e-mail: praboo.praboo@gmail.com**

**'கண்ணாமூச்சி' இலக்கியப் பணி தொடர வாழ்த்துகள்...**